

# பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்

கவிஞர் புதுவை இரத்தினதுரை

# பூவரசம் வேலியும்
# புலுனிக் குஞ்சுகளும்

# பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்

புதுவை இரத்தினதுரை

நங்கூரம்
யாழ்ப்பாணம்

* பூவரசம்வேலியும் புலுனிக்குஞ்சுகளும் * கவிதைகள் * ஆசிரியர்: புதுவை இரத்தினதுரை * முகவரி: புத்தூர் கிழக்கு, புத்தூர். * பதிப்புரிமை: ஸ்ரீரஞ்சினி இரத்தினதுரை * ஓவியங்கள்: ட்ரொஸ்கி மருது * வெளியீடு: நங்கூரம், யாழ்ப்பாணம். * முதற்பதிப்பு: பங்குனி 2005 * பக்கங்கள்: 432.

* *Poovarasam veliyum Pulunikkunchuhalum* * *Poems* * *Author: Puthuvai Ratnathurai* * *Address: Puttur East, Puttur. Tel: 021- 222-3897, Web: www.puthuvai.com, e-mail: viyasan_11@yahoo.com* * *Copyright: Sriranjini Ratnathurai* * *Drawings: Trotsky Marudu* * *Publisher:Nankkoorum, Registrar Lane, Thirunelvely East, Jaffna. e-mail: nankkoorum@yahoo.com* * *First Edition: March 2005* * *Pages: 432.*

# காணிக்கை

உருவும் உயிரும்தந்து பிறக்கவைத்து
கடன்தந்த பெற்றோர்
கந்தையா வரதலிங்கம்
வரதலிங்கம் பாக்கியம்
உறவும் இறகும்தந்து பறக்கவைக்கும்
உடன்வந்த சோதரர்
ப.இராசலட்சுமி
கு.சரோஜினிதேவி
வ.தர்மகுலசிங்கம்
நிழலும் அழகும்தந்து சிறக்கவைக்கும்
கரம்தந்த மனைவி
ஸ்ரீரஞ்சினி
நிமிர்வும் திமிரும்தந்து இறக்கவைக்கும்
வரம்தரும் பிள்ளைகள்
மாலிகா
சோபிதன்
ஜீவிதன்

ஆகியோருக்கு.

# பூவரசம்வேலி

"நமக்குத் தொழில் கவிதை,
நாட்டுக்குழைத்தல், இமைப்பொழுதும்
சோராதிருத்தல்..."

-பாரதி

***புதுவை இரத்தினதுரையின் 'பூவரசம் வேலியும் புலுனிக்குஞ்சுகளும்' எனும் கவிதைத் தொகுதியை முன்னிட்டு எழுதப்படும் அவர் பற்றிய இலக்கிய வரலாற்று-விமரிசனக் குறிப்பு:***

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே புதுவை இரத்தினதுரை எனும் கவிஞன் பெறும் இடம் எடுத்தவுடன் முன்னுதாரணம் காட்டமுடியாத ஒரு 'பதவிப்பணி' ஆகும். தமிழீழ விடுதலைப்புலிகள் எனும் அரசியல் தளைநீக்க இயக்கத்தினது கொள்கைகள், நடைமுறைகள், அநுபவங்கள், இலட்சியங்கள் ஆகியவற்றுக்கான கவித்துவப் பரப்புகையைச் செய்யும் பணியில் இவர் ஈடுபட்டுள்ளார். அவ்வியக்கத்தின் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளராக உள்ள இவரது பணிநிலையைத் தமிழ் இலக்கிய மரபில் ஏற்கனவேயுள்ள ஆஸ்தான கவிஞர் என்ற நிலையோடு இணைத்துப் பார்ப்பதற்கான மன உந்துதலே மேலோங்கி நிற்கும். ஆயினும் மக்கள் எதிர்பார்ப்புக்களையும் இசைவுகளையும் கொண்டியங்கும் ஒரு தளைநீக்க இயக்கத்தை, அதிகார வலுவைத் தனது ஒரே நியாயப்பாடாகக் கொண்டியங்கும் அரசு நிறுவனத்துடன் இணைத்து நோக்க முடியாது. நோக்குதலும் கூடாது. அவ்வகையில் புதுவை இரத்தினதுரையின் வகிபாகம் அத்தளைநீக்க இயக்கத்தின் முன்னிலைக் கவித்துவ எடுத்துரைப்பாகவே கொள்ளவேண்டும்.



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

ஏனெனில் அத்தளைநீக்க கருத்து நிலையினை ஏற்றுக் கொண்டு ஆனால், இவ்வியக்கத்துடன் சேர்ந்தும் சேராமலும் அப் போராட்டத்தினை நியாயப்படுத்துபவர்களான பல்வேறு கவிஞர்கள் உள். இவர்களிடையே புதுவைக்கான இடம் அவரது கவித்து வத்தின் வனப்பிலே தங்கியிருக்க முடியுமல்லாமல் பதவி வழங்கும் அதிகார முன்னிலையில் அல்ல.

உண்மையில் புதுவை பற்றிய விமர்சிப்புகள் அவர் புறக்கணிக்க முடியாத ஒரு கவிஞர் என்பதிலேயே காலூன்றி நிற்கின்றன. இந்நிலை காரணமாக புதுவையின் கருத்து நிலையூற் றையும், கவித்துவ இயல்பையும், அவற்றின் இணைவையும், அந்த இணைவு எவ்வாறு தொழிற்படுகின்றது என்பதனையும் பார்க்க வேண்டுவது இலக்கிய விமரிசனத்தின் முக்கிய கடமையாகும். இலக்கிய விமரிசனம் உண்மையில் இலக்கிய வரலாற்றுத் தெளிவுக் கான ஒரு முக்கிய துணைக்கருவியே ஆகும். இது நம்மை ஒரு சுவாரசியமான புலமைச்சவாலுக்கு இட்டுச்செல்கிறது.

ஈழத்துத் தமிழரின் தளைநீக்கப் போராட்டத்துக்கான கருத்து நிலைத்தளம் புதுவையின் கவித்துவத்துடன், அக்கவித்துவத்தின் தள நிலைகளுடன் எவ்வாறு இணைகிறது என்பதும், அந்த இணைவு புதுவையின் தொழிற்பாட்டுக்கு எவ்வாறு பயன்படுகிறது என்பதும் முக்கியமான விடயப் பொருள்கள் ஆகின்றன.

தளைநீக்கப் போராட்டத்துக்கான உலக நிலைப்பட்ட முன்னுதாரணங்கள், தமிழ் நிலைப்பட்ட வரலாற்றுப் பின்புலம் ஆகியவற்றை நோக்குகின்றபோதே இப்பிரச்சினை தெளிவாகும். ஏனெனில் இதற்கு கவிதை இலக்கியத்தின் சமூகப் பயன்பாடு, சனநாயகத்தின் அரசியல், சமூக விகசிப்புகள் ஆகியன சம்பந்தப் படுகின்றன. உண்மையில் வரலாற்றின் தேவைகளைத் தனிமனிதன் தோற்றுவிப்பதில்லை. தனிமனிதனின் திறமை, அவனின் சமூகக் கடமையுணர்வு, வரலாறு பற்றிய தெளிவு ஆகியன வரலாற்றின் தேவையோடு இயைகின்றபொழுதே திறமையுள்ள தனிமனிதன் வரலாற்றுப் புருஷனாகின்றான். வரலாறு அவன் மூலம் தொழிற் படுகின்றது. இந்த இணைவின் தர்க்கத்தை அத்தனிமனித ஆளுமை தவறாக விளங்கிக்கொண்டால் அல்லது சரியாக விளங்கிக்கொள்ளா விட்டால் அது அந்தத் தனிமனிதனது வீழ்ச்சியாக மாத்திரமல்ல, அக்கருத்து நிலைக்குக்கூட தற்காலிகப் பின்னடைவைத் தரலாம்.



Tamileelam Archive

எனவே ஆள்நிலை முக்கியத்துவத்தை வரலாற்றுப் பின்புலத்தில் வைத்துப் பார்க்கவேண்டியது அவசியமாகின்றது. இத்தகைய பார்வை புதுவை பற்றிய ஒரு மதிப்பீட்டுக்கும் அத்தியாவசியமாகின்றது. அது புதுவையைப் பற்றிய ஆள்நிலை விதந்து ஓதுகைக்காக அல்ல. உண்மையில் அது இவரது கவித்துவ ஆளுமையும், கருத்து நிலையும் இணைகின்ற, இணையாமல் விடுகின்ற இடங்களையும், சந்தர்ப்பங்களையும் பற்றிய ஒரு தேடலாகும்.

இலக்கிய விமரிசனத்தின் சவாலே அதுதான். மனித உணர்ச்சிகள், அவற்றின் வெளிப்பாடு, அந்த வெளிப்பாட்டுக்கான எடுத்துரைப்புக்கள் ஆகியன பற்றிய உணர்ச்சிநிலைப்படாத *(Clinical)* ஒரு ஆய்வாகும்.

## II

இலக்கியம் அரசியல் சார்ந்ததாக இருப்பது தவிர்க்க முடியாத ஒன்று. மக்களின் ஒருமைப்பாட்டுக்கோ அல்லது ஒருங்கு நிலைப்பாட்டுக்கோ இலக்கியம் தொழிற்படுவது அதன் தோன்று நிலை இயல்புகளில் ஒன்று. இலக்கியம் வாய்மொழியாக இருந்த காலங்களில், இடங்களில் இச்செயற்பாடு காணப்பட்டமையை அறி கின்றோம். கலை, இலக்கியத்தின் வனப்பு மனிதர்களிடையே உணர்வுநிலை உந்துதல்களை ஏற்படுத்த, அந்த வனப்பியல் காரணமாக மக்கள் ஒன்றாகக் குழுமுவர். அந்த ஒருங்குசேர்நிலையைப் பேணவும் விரும்புவர். வாய்மொழி நிலையில் வரும் முன்னிலைப் புகழ்ச்சி, அவற்றிலும் பார்க்க பிரதானமாக அந்த அந்தக் குழுமங் களின் வரலாறுகள், உறவுகள் பற்றிய ஐதீகங்களைக் கருப்பொரு ளாகக் கொண்ட கதைகள் இவ் உண்மையை நிலைநாட்டும். வாய்மொழி எழுத்துமொழியாக மாறத்தொடங்கியதும் (அந்நிலையில் சமூகம் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டதாக இருக்கும்) இலக்கியம் கல்வியோடு, கல்வியை நிறுவனமயப்படுத்துவதோடு சம்பந்தப்படத் தொடங்கி அறநிலைப்பட்டதாக மாறும். இத்தகையதொரு வளர்ச்சி ஆள்புலத்துள் வரும் மக்களை எழுத்தறிவுப் பண்பாட்டுக்கு உள்வருபவர்கள் - அதற்கு வெளியே நிற்பவர்கள் என்ற இரண்டு நிலைக்கு இட்டுச்செல்லும். ஆனால் இந்த இரண்டு நிலைகளிலும் அவ்வச் சூழலிற்கேற்ப கலை, இலக்கியப் படைப்புக்கள் வந்து கொண்டே இருக்கும்.

சனநாயகம் எனும் கருத்துநிலையின் வரவு மக்களை அதிகார வேறுபாடுகளால் பாதிக்கப்படாத சனக்குழும நிலையை ஊக்குவிக்கும். மிகச்சுருக்கமாக மேலே எடுத்துக் கூறப்பட்டுள்ள வளர்ச்சி வரலாற்றில் கவிதைக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. கவிதையின் வலு இரண்டு தளங்களில் இருந்து கிளம்புவது - ஒன்று, அந்தக் கவிதையின் மொழிலயத்தின் வழியாக வருவது. பூர்வீகநிலைமுதல் இன்றும் கூட அது பாடலாக அமையும் (பாடல் என்பது பாடுதல் ஆகிய தொழில்). அது வனப்புக் கவர்ச்சியுள்ள ஒரு சொல் ஒழுங்கைப் பாடுதல் ஆகும்.

இரண்டாவது, செவிவழிவரும் அல்லது மனநிலைப் பட்டதான அந்த லய இறுக்கத்தினுள் வரும் சொற்பயன்பாடு. அவற்றின் தேர்வுப் பொருத்தம் காரணமாக கேட்பவர், வாசிப்பவர் மனதில் உணர்வலைகளைக் கிளறிவிடும். கட்டிறுக்கமும், சொற் தேர்வும், தேர்ந்த சொல்லின் ஒழுங்கும் நுகர்வோரை இன்னொரு தளத்துக்குக் கொண்டுசெல்லும். இதனால் கவிதை எப்பொழுதும் இலக்கிய வெளிப்பாட்டில் முதல் இடம்பெறுவது (கட்டிறுக்கமே கவித்துவத்தைத் தரும் என்பதற்குத் திருக்குறள் நல்ல உதாரணம்) குறிப்பிடத்தக்கது.

தமிழின் இலக்கிய வரலாற்றில் ஏறத்தாழ கி.பி 13ஆம் நூற்றாண்டு வரை நமக்குக் கிடைத்துள்ள இலக்கியங்கள் எல்லாமே ஏதோ ஒரு வகையில் பேணப்பட்டவையே. எனினும், அவற்றுக் குள்ளும்கூட கவிதையின் வனப்புத் தொழிற்பாடுகளை அவதானிக் கலாம். சங்கப் பாடல்களின் பேச்சோசை கிளப்பும் மன ஒலிகள், போதனைப் பாடல்களின் நறுக்குத் தெறித்தாற் போன்ற கட்டிறுக்கக் கவர்ச்சி, சமண பௌத்த எழுத்திலக்கிய மரபை உடைக்கும் பண்ணோடு கலந்த தேவாரங்கள், பாசுரங்கள், இசைப்பாக்கள், குழுமியிருந்து கேட்போர் செவிப்புலனால் உள்வாங்கி மனத்தால் கட்புலப்படுத்தி திளைப்பதற்கு ஏற்றதான விருத்தத்தின் சுழல் ஒலி ஆகியவை கவிதையின் மக்கள்நிலை நுகர்வையும், அந்த நுகர்ச்சி இன்பங்களையும் நமக்குக் காட்டிச் செல்கின்றன. பின்னர் வந்த நூற்றாண்டுகளில் (கி.பி14 இல் இருந்து) நுகர்வுக் கவர்ச்சிக்கான தேர்வே பள்ளு, குறவஞ்சி, சிந்து, கண்ணி என புதிய பா வடிவங்கள் வருவதற்கான காரணங்கள் ஆகின்றன.

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

தமிழ் இலக்கியத்தின் காலப் பிரிகோடுகளில் ஒன்றாக விளங்கும் சுப்ரமணிய பாரதி தமிழின் எழுத்திலக்கியப் பாரம்பரியம் தன் போக்கிற்கு அமைய தூரப்படுத்த விரும்பிய ஒரு செல்நெறியை உடைத்து கவிதையை மீண்டும் மக்கள் இயக்க தொழிற்பாட்டுக்கான அத்தியாவசிய சக்தியாக்குகின்றான். உரைநடையையும் கவிதையையும் அவற்றினது பண்புகளுக்கமையப் பயன்படுத்திய பாரதி கவிதையை மக்கள் இயக்கத்தின் அச்சாணியாக்குகிறான்.

உண்மையில் பாரதி தமிழ்க்கவிதை வரலாற்றுக்குச் செய்த பெருமாற்றம் கவிதையைத் தன்னைச் சூழவுள்ள விடயங்கள் தன்னிடத்தில் கிளம்புகின்ற உணர்ச்சி / உணர்வுப் பதிற்குறிகளாக ஆக்குதல் (Poetry as emotional response to concerns that move him) ஆகும். இதனைச் சங்க இலக்கியத்து பாணர் கவிமரபு நிலைப்பட்டதாகவோ அல்லது புலவர்களின் தனிப்பாடல் பாரம்பரியத்தினுள் வருவதாகவோ கொள்ளாது மேற்கத்தைய, குறிப்பாக ஆங்கிலக் கவிதைமரபில் 18, 19ம் நூற்றாண்டுகளில் முக்கியத்துவம் பெறும் கவிதைச் செல்நெறியின் தமிழ்நிலைப்பட்ட வடிவமாகவே கொள்ளவேண்டும். நமது மரபில் இவனுக்கு முன்னர் வந்த மற்றெந்தப் புலவரிலும் பார்க்க இவனது உலகநோக்கு முக்கியப்படுவதற்கு இந்த அம்சமே காரணமாகிறது.

இரண்டாவது அம்சம் கவிதையை அரசியல், சமூக இயக்கங்களுக்கான ஒரு கைத்துணையாகக் கொள்ளும் போக்காகும். மக்களிடத்து நேரே செல்லவேண்டுமென்ற சனநாயகப் போக்கு காரணமாகவும் மக்களிடத்து இயக்க உந்துதல்களை ஏற்படுத்துவதற்கும் பாரதி கவிதையைப் பயன்படுத்தினான்.

இந்த இரண்டும் தனித்தனியாக, ஒன்றுடனொன்று ஊடாடாது பிரிந்திருப்பவை அல்ல. இணைந்தே வரும். மக்களுடன் தொடர்பு கொள்வதற்காக கவிதை பாடலாகிறது. பாடல் மக்களுக்குத் தெரிந்த மெட்டுக்களில் இயற்றப்படுவதாகவோ அல்லது குறிப்பிட்ட இராகங்களில் பாடப்படுவதாகவோ இருக்கவேண்டும் என்று கூறினான். இதனால் ஏற்பட்ட ஒட்டுமொத்த விளைவு பாரதியின் பாடல்கள் இந்திய சமூக அரசியற் சுதந்திரங்களிற்காக மக்களை ஒருங்குதிரட்டும் சக்தியாகின்றன. உண்மையில் தமிழ் நாட்டில் மாத்திரமல்ல முழு இந்திய நிலைப்படக் கூறினாலும் சுப்ரமணிய பாரதியின் பாடல்களை விடுத்து இந்திய சுதந்திர வரலாற்றை

எழுதிவிட முடியாது. (கவித்துவ ஆற்றல் தனக்குள்ளதெனக் கருதும் அடல்பிஹாரி வாஜ்பாய், இந்தியத்தாய் பற்றி பாரதி கூறிய செப்பு மொழி பதினெட்டு உடையாள் எனிற் சிந்தனை ஒன்றுடையாள் என்ற வரிகளை மதித்துப் போற்றுவார்)

பாரதியின் தமிழபிமானம் அனைத்திந்தியக் கட்டுக்கோப் பிற்குள் தமிழ் முக்கிய இடம் பெறவேண்டுமென்றும் கருதியது. இதனாலேதான் தமிழை அவன் ஆர்யஸம்பத்துகளில் ஒன்றாகக் கொள்ளுவான். இந்திய சுதந்திரப் போராட்டக் கட்டமைப்பினுள்ளே தமிழர் முக்கிய இடம்பெற வேண்டுமென்பதும் தமிழ்ச் சமூகத்திற் காணப்படும் குறைபாடுகள் நீங்கவேண்டுமென்பதும் பாரதியின் இதயத்துடிப்பாக இருந்தது.

பாரதியின் இந்தப் பாரம்பரியத்தை பாரதிதாசன் கருத்து நிலை பூர்வமாக உள்வாங்கி, 1940களிலிருந்து முக்கியம் பெறும் திராவிட தமிழியக்கங்களின் பிரதான கவிஞராகின்றார். பாரதியாரைப் போலவே பாரதிதாசனும் மக்களின் இயக்க நிலைக்கான பாடல் களை எழுதுகின்றார். பாரதிதாசனுடைய பிற்கால வாழ்க்கை அரசி யல் முரண்பாடுகளையும் கவித்துவப் போக்கில் சில மாற்றங்களையும் (சிலப்பதிகார வெண்பா, மணிமேகலை வெண்பா) காட்டுகிறது. எனினும் ஒட்டுமொத்தமான தமிழியக்க வளர்ச்சியில் அவருடைய பணி முக்கியமானதாகின்றது. 1967ல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் வெற்றியுடன் தமிழியக்கத்திற்கான சமூக அரசியற் போராட்டம் ஒரு முக்கிய கட்டத்தை எட்டுகின்றது. தி.மு.க, அ.தி.மு.க அரசுகள் தங்களது அதிகார நியாயப்படுத்தலுக்காக தமிழியக்கக் கவிஞரான பாரதிதாசனை ஆட்சிக்கான சின்னங்களில் ஒன்றாகக் கொள்கின்றன (பாரதிதாசன் பல்கலைக்கழகம்). (கனக சுப்புரத்தினம் என்ற மரபுவழித் தமிழறிஞன், தனது கருத்துநிலைத் துணிபுகள் காரணமாக எவ்வாறு மதச்சூழலினூடே தமிழின் இனவெழுச்சிக் கவிஞனாக மாறுகிறான் என்பதும் பாரதிதாசன் தமிழியக்க, திராவிட இயக்கத் தலைவர் களோடு கொண்டிருந்த முரண்பாடுகள், எதிர்ப்புணர்வுகள் ஆகியனவும் அவருடைய பகுத்தறிவு நோக்கு, பிற்காலத்தில் பழந்தமிழ் இலக்கிய நூல்களைப் பார்க்கும் முறை என்பனவும் எவ்வாறு அவரது கவித்துவ ஆளுமையினூடே பின்னிப்பிணைந்து வருகின்றன என்பது பற்றியும் பாரதிதாசனுடைய கவிதை மொழியில் காணப்படும் விகற்பங்கள் பற்றியும் நுண்ணிதான ஓர் ஒட்டுமொத்த ஆய்வு வேண்டும்.)

ஆயினும் 1960களிலிருந்து தமிழகத்தின் அரசியல் எழுச்சிகள் துண்டாடப்பட்டவையாகவே உள்ளன. அரசியற் பெருங் கட்சிகளின் உள்ளே ஏற்பட்ட பிளவுகள் இந்த மக்கள் எழுச்சி துண்டாடப்பட்டுக் கிடப்பதையே காட்டுகின்றன. இதனால் குறிப்பாக 1970களிலிருந்து வருகின்ற தமிழகத்துக் கவிதைகள் பெரும்பாலும் நம்பிக்கை வரட்சியைக் காட்டுவனவாகவே உள்ளன. இக்காலப் பிரிவுக்குரிய (ஏறத்தாழ 1970முதல் 2000வரை) கவித்துவ முக்கிய முடைய கவிஞர்கள் இந்த நம்பிக்கை வரட்சியை - பெறுமானச் சீரழிவை வனப்புடன் சித்திரித்துள்ளனர். ஞானக்கூத்தன் முதல் அறிவுமதி வரை, ஈரோடு தமிழின்பன் முதல் கனிமொழி வரை இந்தப் போக்கினைக் காணலாம்.

## III

மேற்கூறிய தமிழகத்துக் கவிதை வளர்ச்சிப் பின்புல அறிவோடு ஈழத்தை நோக்கும் போது, ஈழத்தில் நவீன காலத்தில் தெரியும் சமூக - இலக்கிய ஊடாட்டம் மிக முக்கியமானதாகப் படுகிறது. (தமிழகத்து இலக்கிய வளர்ச்சியில் தமிழின் நவீன காலத்தை 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து தொடங்கும் நாம் ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றின் நவீன யுகத்தை 1930களுக்குக் கொண்டுவரவேண்டிய அவசியம் நன்கு ஆராயப்படாது எடுக்கப்பட்ட ஒரு முடிவோ என்று ஐயுறவேண்டியுள்ளது.)

ஈழத்தில் தமிழின் நவீனமயவாக்கத்தை உள்வாங்கிய நாவலர் அந்த நவீனமயவாக்கத்தை (அச்சுமுறைமை, புத்தக வெளியீடு ஆகியன) பழமையைப் பேணுவதற்காகப் பயன்படுத்து கிறார். அது அவரது கண்ணோட்டத்தில் ஒரு பிரதான சமூகத் தேவையாகப்படுகிறது. ஆயினும் இந்தப் பழமைபேண் வாதத்தினூ டேயும் எழுத்தறிவின் பரம்பல், அச்சின் படிப்படியான முன்னேற்றம், கல்வி ஆகியன வாசக மட்டத்தினை விரிவாக்குகின்றன. ஆங்கில காலனித்துவம் ஆங்கிலக் கல்வியைக் கிறிஸ்தவமயவாக்கத்துடன் தொடர்புபடுத்த, கிறிஸ்தவமதமயப்படுத்துகை பாரம்பரிய சமூகச் சலுகைகளுக்கு இடமளிக்காததைக் கண்டு மதப் பேணுகை, பழமையைப் பேணுவதற்கான தளமாயிற்று. அது எவ்வாறாயினும் சமூகத் தேவைக்கு இலக்கியம் பயன்படுத்தப்படவேண்டும் என்ற கொள்கை நிலைநிறுத்தப்படலாயிற்று.

நாவலருக்குப் பின்னர் வரும் பாவலர் துரையப்பாப்பிள்ளை (1874 – 1929) யாழ்ப்பாணத்தில் நாவலர் தொடக்கிய நவீன மயவாக்கத்தின் அடுத்த கட்டத்துக்குச் செல்கிறார். அவர் அடிப்படையில் சமூகப் பழமைவாதத்தைக் கைவிடவில்லையெனினும், இந்திய சுதந்திரப் போராட்டத்துடன் ஏற்பட்ட தொடர்புகள் காரணமாக சமூக நவீனமயவாக்கத்திற்கான ஆற்றல்மிக்க புலவர் / கவிஞராக மேற்கிளம்புகிறார். இவரது சுதேசக் கும்மியில் வரும் 'சுதேச' என்ற சொல் சமகால அரசியற் கனதியுடைய ஒரு பிரயோகமுமாகும். இவரைத் தொடர்ந்து 1920களில் தோன்றிய இளைஞர் காங்கிரசுடன் முற்றுமுழுதான அரசியல் சமூக நவீனமய வாக்கத்திற்கான இயக்கம் ஆரம்பிக்கின்றது. இந்தச் சமூக சனநாயகமயவாக்க செல்நெறியின் பின்புலத்திலேயே தீண்டாமை எதிர்ப்பு, சுதந்திரக்கோரிக்கை ஆகியன ஈழத்துத் தமிழிலக்கியத்தின் பொருளாக்கப்படுவதற்கான முயற்சிகள் தொடங்குகின்றன. 1930களில் தொடங்கும் சமூக, சமய, இதழியல் வளர்ச்சிகள் (வீரகேசரி, ஈழகேசரி, தினகரன்) இந்த இலக்கியத் தேவையை முன்னிறுத்துகின்றன. இந்தப் பின்புலத்திலே தான் ஈழத்தில் தமிழ்க் கவிதை முற்றுமுழுதான அரசியல் பேசத் தொடங்குகிறது எனலாம். (வல்வை. வைத்திலிங்கம்பிள்ளை போன்றோர் 19ம் நூற்றாண்டிலேயே மதுவொழிப்புப் பாடல்களை எழுதத் தொடங்கிவிட்டனர்.) 1942ல் தொடங்கும் மறுமலர்ச்சி இயக்கத்தின் பெயரில் வரும் 'மறுமலர்ச்சி' என்ற கருத்தாக்கத்தை பாரதி தமிழகத்தில் ஏற்படுத்திய மாற்றத்தோடு இணைத்து நோக்கவேண்டும். அங்கு தமிழின் மறுமலர்ச்சி என்பது தமிழ்மக்கள் சகலரினதும் வாழ்க்கைகளில் அவற்றின் முன்னேற்றத்தில் இடம்பெறுதலாகும். ஈழத்திலும் 1940களில் வந்த மறுமலர்ச்சி இயக்கத்துக் கவிதைப் படைப்பாளிகள் தம்மைப் புலவர்கள் என்று சொல்வதிலும் பார்க்க கவிஞர்கள் என்று சொல்லவே விரும்பினர். சோமசுந்தரப் புலவருக்கும், சோ.தியாகராஜா, அல்வையூர் மு.செல்லையா, நாவற்குழி நடராசன் பின்னர் அ.ந.கந்தசாமி, மஹாகவி ஆகியோருக்குமிடையே உள்ள வேறுபாட்டைப் புரிவதற்கு இப்பதப் பிரயோகம் ஒரு நல்ல தளமாகும். (அத்துடன் தமிழின் புதிய புனைகதைமரபு முக்கியமாகச் சிறுகதை ஈழத்திலே தமிழகக்கணிப்புள்ள இலங்கையர்கோன் போன்றவர் களைத் தோற்றுவித்தது.)

•

பாரதியின் கவித்துவக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் ஒரு கவிஞர்குழாம் ஈழத்தில் ஸ்தாபிக்கப்படுகிறது. அத்துடன் இலக்கியத்தின் சமூகப் பயன்பாட்டிற்கான அத்தியாவசியமும் மேலும்

ஒருபுறமாக வற்புறுத்தப்பட்டது. 1930களிலிருந்து யாழ்ப்பாணத்தில், கொழும்பில் ஏற்பட்டு வந்த இலக்கிய மாற்றங்களோடு அதைத் தொடர்ந்துவரும் மறுமலர்ச்சி செல்நெறிகளோடு மலையகத்தில் நடேசய்யரும் அவரது மனைவியாரும் ஏற்படுத்தி வந்த மாற்றங்களை இணைத்துப் பார்த்தல் வேண்டும். எழுத்தறிவற்றவராக விளங்கிய தோட்டத் தொழிலாளரிடையே எழுதப்பட்ட பாடல்களைக் கொண்டு செல்லும் மரபு, உண்மையில் வாய்மொழிப்பாங்கையும் எழுத்துப் பாங்கையும் இணைத்துச் செல்லும் *(Semi oral)* மரபாகக் கொள்ளப்படல் வேண்டும்.

இத்தகைய வளர்ச்சிப் பின்புலத்திலேதான் 1950களில் ஈழத்தில் வருகின்ற முற்போக்கு இலக்கிய செல்நெறியைப் பார்த்தல் வேண்டும். முற்போக்கு இலக்கியத்தின் பிரதான எடுகோள், இலக்கியம் சமூக இயக்கங்களுக்கான போராட்டக் கருவியாக இருத்தல் வேண்டும் என்பதாகும். 1950 - 1970 காலப்பகுதியில் நிலவிய முற்போக்கு இலக்கியக் கொள்கையும் தமிழியக்கப் போக்கும் கவிதைப்பயன்பாட்டில் கவிதை அரசியல், சமூகப் பயன்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டுமென்பதில் கருத்துவேறுபாடுகளைக் கொண்டிருக்கவில்லை. காசி ஆனந்தன், சச்சிதானந்தம், ராஜபாரதி போன்றோர் ஒரு முனையிலும் அ.ந.கந்தசாமி, சில்லையூர் செல்வராசன், முருகையன் போன்றோர் இன்னொரு முனையிலும் நின்று தொழிற்பட்டனர்.

1950 - 1970 காலப்பகுதியில் ஈழத்தில் தமிழிலக்கியத்தின் அரசியல்மயப்பாடு பூரணமான ஒன்றாகிவிட்டது. பொதுவுடைமைச் சித்தாந்த அடிப்படையில் சமூக முற்போக்கு இலக்கியக்காரரும், தமிழரசுக் கட்சியினால் நடத்தப்பெற்ற தமிழை மையப்படுத்தியதும் அத்தமிழ் மையப்படுத்துகைக்கான உதாரணமாக தமிழகத்தில் அக்காலத்தில் கொடிகட்டிப் பறந்த தமிழியக்கப் போக்கை உள் வாங்கி அதன்வழி தமிழியக்க அரசியலை ஆதரித்தவர்கள் ஒருபுறமாகவும் உண்மையில் ஈழத்து இலக்கியக்களம் ஒரு அரசியலுக்கான போர்க்களமாகவே அமைந்திருந்தது. இந்தப் போர்நிலைத் தன்மை உண்மையில் கவிதைத் தளத்திலேயே மிகவும் உக்கிரமாகக் காணப்பட்டது. முற்போக்கு இலக்கிய வளர்ச்சிக்கான தளமாக 1957-1965 காலப்பகுதியில் தினகரன் அமைந்திருந்தது. தமிழரசுக் கட்சியின் கருத்துநிலையின் தளமாக சுதந்திரனும், சுடரும் அமைந்திருந்தன. (முற்போக்கு இலக்கியத்தின் கருத்துநிலையை உள்

வாங்காத பிரதானமாக புனைகதை இலக்கியத் துறையிலேயே நாட்டம் கொண்டிருந்தவர்களான சிலர் உண்மையில் ஒரு மூன்றாவது குழுவினராக நின்றனர் என்றே கொள்ளல் வேண்டும்.) கவிதை வளர்ச்சியைப் பொறுத்தவரையில் இந்தக் கருத்துநிலைப் பிரிநிலை தெளிவாகவே தெரிந்தது. அக்காலத்து அரசியல்நிலை சமூக விடுதலை, போராட்ட முயற்சிகள் ஆகியன காரணமாக முற்போக்கு இலக்கிய அணியினருக்கும் தமிழரசியல் சார்ந்த இலக்கிய அணி யினருக்குமிடையே ஆழமான கருத்து வேறுபாடுகள் இருந்தன.

இக்கட்டத்தில் ஒரு முக்கிய உண்மையைப் பதிவுசெய்து கொள்ளல் வேண்டும். இக்காலத்தின் தமிழரசியல் இயக்கம் தமிழ் மொழியைப் பிரதானப்படுத்துவதாகவும், சமூக விடுதலைப் போக் கிற்கு முக்கியத்துவம் கொடுக்காததாகவும் இருந்தது.

இவ்விரண்டு இலக்கியப் போக்குகளுக்கிடையேயும் காணப்பட்ட கருத்து வேறுபாடு, எழுதுபொருள் வேறுபாடு பற்றிய பல பிரச்சினைகள் இருந்திருப்பினும் இலக்கியத்தின் அரசியல் மயப்பாட்டில் கருத்து வேறுபாட்டிற்கு இடமேயில்லாமலிருந்தது. அரசியல் இயக்கத்தில் கலை, இலக்கியம் பங்குபெறல் வேண்டும் என்ற கருத்தில் ஒரு நிலைபேறுடைமை ஏற்பட்டது. இலக்கியம் தனியே ரசிப்பதற்காகவே என்ற கொள்கை வன்மையாகக் கண்டிக் கப்பட்டது.

1960களின் பிற்கூற்றிலிருந்து முற்போக்கு இலக்கியச் செல்நெறிக்குள்ளேயே கருத்துவேறுபாடு ஏற்பட்டது. படைப்பாளிகள் நிலையில் முக்கியமான பலர் சீன, மொஸ்கோ கருத்துநிலைப் போரில் சீன நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டனர்.

ஏறத்தாழ 1970களின் தொடக்கத்திலிருந்தே, தமிழர் வாழும் பிரதேச அரசியலில், சமூக வாழ்க்கையில் படிப்படியாக மாற்றம் ஏற்பட்டது. முற்போக்கு இலக்கிய செல்நெறியின் வேகத் தளர்வு ஏற்பட்ட அக்காலச் சூழலில் சமூக - அரசியற் போக்கில் அளவு நிலைப்பட்ட அதனோடிணைந்து தரநிலைப்பட்ட மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. 1972ஆம் ஆண்டின் புதிய ஆட்சி யாப்புப்பிரகடனம், அரசபடையினரின் அட்டூழியங்கள் ஆகியன காரணமாகவும், இடதுசாரிக் கட்சிகள் 1964முதல் தனிச்சிங்களத்தை ஏற்றது மாத்திரமல்லாமல் பண்டாரநாயக்கா அரசின் ஓர் அங்கமாகி

மௌனித்துப் போனமையாலும் தமிழ்ப் பிரதேச அரசியலில் உருவ, உள்ளடக்க மாற்றம் ஏற்பட்டது. இதனூடாக ஒருபுறத்தில் அரசை எதிர்ப்பனவாகவும் மறுபுறத்தில் அப்பொழுது நிலவிய தமிழ் அரசியலை நிராகரிப்பனவாகவும் அதேவேளையில் பின்காலனித்துவப் போராட்ட நாடுகளில் மார்க்சிய முனைப்புடன் தொழிற்பட்ட தளை நீக்கற் கோட்பாட்டை *(Liberation)* ஏற்றுக்கொண்டனவாய் இளைஞர் இயக்கங்கள் தோன்றின. இவற்றுள் 1970களின் பிற்கூற்றில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டவையாக இருந்த போர்முனைப்புடையனவாய் விளங்கிய இளைஞர் இயக்கங்கள் தமிழ் மக்களிடையே நிலவிய அரசியலில் ஒரு தளமாற்றத்தை ஏற்படுத்துகின்றன. இது காரண மாக ஈழத்துத் தமிழ் இலக்கியக் களத்திலும் பெருமாற்றம் ஏற்படு கிறது. அரச ஒடுக்குமுறைகளின் பலாபலனாக தமிழ்ப்பிரதேசத்தின் சூழல் எத்தகைய நிலைப்பட்டது என்பதை 1980களின் தொடக்கப் பகுதியில் வந்த மிக முக்கியமான கவிதைத் தொகுப்பான 'மரணத் துள் வாழ்வோம்' எடுத்துக் காட்டுகிறது. ஈழத்து தமிழ்க் கவிதையின் ஒட்டு மொத்தமான குரல் என்று சொல்லுமளவிற்கு 'மரணத்துள் வாழ்வோம்' என்ற தொடர் ஒரு பொதுத்தலைப்பாக அமைந்தது. தீவிரவாத இளைஞரை அடக்கவெனப் புறப்பட்ட அரசபடை தமது எதிர்ப்பை முழுத்தமிழ் மக்கள் மீதும் பாயவிட்டது. சூடு என்றாலும் சரி, குண்டு என்றாலும் சரி சிவில்சமூகம் என்ற ஒன்று தமிழ் மக்களிடையே இருப்பதாக அரசபடையினராலும் அவற்றின் ஏவுதற் கர்த்தாக்களாலும் கருதப்படவேயில்லை. உண்மையில் தமிழ் மக்க ளைப் பொறுத்தவரை இந்த அரசியற்குறைபாடு முழுச் சமூகத்தை யுமே பாதித்தது.

1977ல் ஜே.ஆர்.ஜயவர்த்தனா தலைமையில் U.N.P பதவிக்கு வருவதும், யாழ்ப்பாணத்து களியாட்ட விழாவொன்றில் தொடங்கிய பொலிஸ் - பொதுமக்கள் கைகலப்பு இனக் கலவரமாக மாறியதும், குறிப்பாக மாகாண நகரங்களாகிய இரத்தினபுரி போன்ற இடங்களில் ஏற்பட்ட கலவரங்களால் பெருந்தொகையான தமிழர்கள் கடல்மார்க்கமாகவும் ஆகாயமார்க்கமாகவும் யாழ்ப்பாணம், மட்டக் களப்பு அனுப்பப்பட்டதும் தமிழ்ப் பிரதேசங்களில் பதற்றத்தை அதிகரித்தது. அரசியலிலும் 1977இன் பின்னர் பகிரங்க அரசியற் பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புக்கூட அற்றுப்போயிற்று. இந்தச் சூழலிலேதான் தீவிரவாத இளைஞர் இயக்கங்கள் மிகுந்த உத்வேகத்துடன் எழத் தொடங்குகின்றன. இந்த நிலை படிப்படியாக வளர்ந்து 1983 கலவரமாக வெடித்துச் சிதறுகிறது. இந்நிலை இளைஞர்

இயக்கங்களின் நிலைப்பேற்றுக்கு முக்கியமான காரணியாகின்றது. 1980களின் தொடக்கத்தில் கிடைத்த இந்திய உறவுகள் இளைஞர் இயக்கங்களின் பலத்திற்கு காரணமாகின்றன. பின்னர் 1984,85 திம்பு மாநாட்டுடன் இளைஞர் இயக்கங்கள் பிராந்திய உலக அங்கீகாரம்பெற்ற அரசியற்சக்தியாகின்றன. வரன்முறையான பாராளுமன்ற அரசியல் தொழிற்பட முடியாத சூழல் ஏற்பட்டமையும் (ஆட்சியாப்புக்கான 6வது திருத்தம்) தீவிரவாத இளைஞர் இயக்கங்கள் அரசியல் அங்கீகாரம் பெற்றமையும் இந்த இளைஞர் இயக்கங்களின் ஆழ அகலமான செயற்பாடுகளுக்கு இடமளித்தது.

இவ்வியக்கங்கள் ஒவ்வொன்றும் தத்தம் செயற்பாடுகளை அதிகரிக்கத் தொடங்கின. இயக்கங்களுக்கான ஆட்சேர்ப்பு ஒருபுறமாகவும் தமது கருத்துநிலைப் பரம்பலுக்கும் ஆட்சேர்ப்பு உந்துதலுக்கான ஊக்குவிப்பு மறுபுறமாகவும் பல தளங்களில் இவர்கள் தொழிற்படத் தொடங்கினர். இக்காலகட்டத்தில் 'மரணத் துள் வாழ்வோம்' தொகுப்புடன் நு.ஃமானின் பாலஸ்தீன கவிதை மொழிபெயர்ப்பும் முக்கியமான ஒன்றாயிற்று. பல்கலைக்கழக அரங் குக்காக குழந்தை சண்முகலிங்கத்தின் 'மண் சுமந்த மேனியர்' சிதம்பரநாதன் நெறியாள்கையுடன் வெளிவந்தது. ஒட்டுமொத்தமான ஓர் அடக்குமுறைச் சூழலில் அச்சுக்கு இல்லாத தொடர்பியல்வலு அரங்க ஆற்றுகைகளுக்கு உண்டு என்பது இக்காலத்தில் நிறுவப் பட்டது. இளைஞர் இயக்கங்கள் கலைகளை இயக்க வளர்ச்சிக்குப் பயன்படுத்தும் ஒரு செல்நெறி இதன்மூலம் பெறப்படுகிறது.

## IV

இந்தப் பின்னணியிலேதான் 1980களின் நடுக்கூற்றில் புதுவை இரத்தினதுரை விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேருகின்றார் என்று எண்ணுகின்றேன்.

புதுவை இரத்தினதுரை ஏற்கனவே ஒரு கவிஞராக அறியப்பட்டிருந்தவர். தேர்ச் சிற்பக்கலைஞனாக இருந்த இரத்தின துரை சீனச் சார்புப் பொதுவுடைமைக் கட்சியின் முக்கிய இளம் கவிஞர்களில் ஒருவராக 70களின் நடுக்கூற்றில் விளங்கினார். அக்கருத்து நிலையிலிருந்தபோது அவரெழுதிய 'வானம் சிவக்கிறது' என்ற கவிதைத் தொகுதியும் 'ஒரு தோழனின் காதல் கடிதம்' என்ற கவிதைத் தொகுதியும் அவரின் அக்கால நிலைப்பாட்டைத் தெளிவு படுத்துகின்றன.

"..... இனிப் புதிய விடிவதனை நாம் பறிப்போம்.
முள்ளை முறித்தெறிந்து முல்லைமலர் கொய்திடுவோம்.
எல்லை தகர்த்தெடுப்போம். எங்களுக்கே வையமினிச்
சொந்தம் எனவுரைப்போம். சுரண்டலரை நாம்முறிப்போம்
பந்தம் பிடித்தினியும் பதவிகளைக் காத்துவரும்
கள்ளர்தனை அழிப்போம். காலிமுகக் கட்டிடத்தின்
உள்ளே சுழல்விசிறி ஊட்டுகின்ற கிளுகிளுப்பில்
சட்டங்கள் தீட்டியெமை தரித்திரத்தில் ஆழ்த்திவரும்
துட்டர்தமை அழிக்க சூளுரைத்து நாமெழுவோம்.
வெற்றுடலை மழையினிலும் வெயிலிலும் குளிப்பாட்டி
அற்புதங்கள் செய்திவ் அகிலமதை மாற்றிவரும்
உற்பத்தி மானுடர்கள் உழைப்பவர்கள் ஆட்சியிலே
ஏறி அமர்வதற்காய் எம்மியக்கம் செய்துவரும்
வீறுடைய போராட்டம் வெற்றியிலே முடிவதற்கு
நானோர் இயக்கமதில் நாடியுடன் நரம்பாகிப்
போனேன்."

(ஒரு தோழனின் காதல் கடிதம், பக் - 12)

ஒரு இளம் பொதுவுடைமைவாதியின் தீவிரம் மிகத் துல்லியமாக கீழ்க்காணும் வரிகளில் தெரிகிறது.

"எழுத்தாணி பிடிப்பதினால் எல்லாம் தெரிந்தவர்போல்
பழுதான இப்பெரிய பாரைத் திருத்துவதற்கு
தம்மால் முடியுமெனத் தம்பட்டம் அடிப்பவர்போல்
தும்மற் படைப்புகளால் தூசுதட்ட முடியுமென
நம்புகின்ற இயக்கமதில் நானில்லை, ஆதலினால்
பேனா பிடித்தெழுவேன் புரட்சிக்கு வேளைவர
தூணாய் நிமிர்ந்தெழுந்து துவக்கும் கரமெடுப்பேன்."

(ஒரு தோழனின் காதல் கடிதம், பக் - 13)

1977 கலவரத்தின் பின்னர்தான் தென்னிலங்கையை தமது வாழிடமாக வரித்துக் கொண்ட தமிழர்கள்கூட பலத்த சேதங்களின் பின், வடக்கு கிழக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். பிரதான மார்க்சிஸ்ட் கட்சிகள் மௌனித்துப் போய்விட்ட அக்காலச் சூழல், மார்க்சிஸ்டுகளிடையே பெருந்தாக்கத்தை ஏற்படுத்திற்று. இவரது 'எழுந்து வா நெருப்புத்தாயே!' எனும் கவிதையின் தொடக்கவரிகள் மிக முக்கியமானவை.

"இருமொழி ஒரு நாடென்று
இதுவரை இருந்த நீதி
தெருவினிற் கிடக்கு தம்மா.
தேசியம் என்ற பிள்ளை
கருவிலே சிதைந்த காட்சி
கண்களிற் தெரியு தம்மா.
பெருத்ததோர் வகுப்பு வாதப்
புயலடித் தோய்ந்த தம்மா"
(இரத்தபுஸ்பங்கள், பக்.35)

குறிப்பாகத் தமிழ் மார்க்சிஸ்டுகளைப் பொறுத்த வரை 1977, 1983 வருடக் கலவரங்களும், 'வடக்கு - கிழக்கில் அவிழ்த்துவிடப்பட்ட படையினரின் அட்டூழியங்களும் தமிழரின் நியாயமான கோரிக்கைகளைப் பற்றிப் பேசுவதை தமிழினவாதம் என்று கொள்ளப்படுவதுமாகியவை ஒரு பெரும் கருத்து முரண் நிலையை ஏற்படுத்தின. தமிழ் இளைஞர்களிடத்து இது இத்தகைய 'தேச நிலைப்பட்ட மார்க்சியப் போக்கு' தமிழ்நிலை மார்க்சியம் பற்றிய தேடலுக்கு வழிதேட, நடுவயது - முதுநிலை மார்க்சிஸ்டு களுக்கு இதுவொரு இருதலைக்கொள்ளி எறும்பு நிலையாகவே மாறிற்று. புதுவை இரத்தினதுரையைப் பொறுத்தவரை இந்நிலை யொரு அச்சாணியான மோதுகையை ஏற்படுத்துகிறது. பொதுவுடை மைக் கருத்துநிலையின் அடிப்படையான மானுட நோக்கு, மனிதர் களை எல்லாவகையான சுரண்டல்களிலுமிருந்து விடுவிக்க வேண்டு மெனக் கூறுகின்றபொழுது, இலங்கையின் சூழலில் பெருநிலை மார்க்சியக் கட்சிகளால் அதனைச் செய்யமுடியாதநிலை ஏற்பட் டது. இத்தகைய ஒரு சூழலில் மார்க்சிய சார்புள்ள இளைஞர்கள் பலர் இயக்கங்களில் சேருகின்றனர்.

1977 கலவரங்கள் ஏற்படுத்திய தாக்கம் காரணமாக புதுவை எழுதியுள்ள கவிதைகள் - முக்கியமாக 'வாசலில் நெருப்பு மூளும்' என்ற கவிதை - அவரது மாறிய மனநிலையைக் காட்டுகிறது. 'வாசலில் நெருப்புமூளும்' என்ற கவிதையை 'சுதந்திரன்' இதழிலேயே நான் வாசித்தேன்.

1977க்குப்பின்னர், ஏறத்தாழ 4 - 5 வருடங்கள் புதுவை, வெளிநாடுகளில் - மத்திய கிழக்கில் தொழில் புரிந்தார் என்று நம்புகின்றேன். இந்த அனுபவங்களின் பின்புலத்திலேதான் புதுவை இரத்தினதுரை விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேருகின்றார்.

## V

விடுதலைப்புலிகளின் செயற்பாட்டுக் கருத்துப் பரப்புகையின் ஊடேயே புதுவையினுடைய கவித்துவ ஆள்நிலை முக்கியத்துவம் தெரியத் தொடங்குகிறது எனலாம். 1986 - 90 காலகட்டம் இவ் விடுதலைப்போர் வரலாற்றில் மிக முக்கியமானதாகும். ஒரு புறத்தில் போராட்டத்தளத்தில் ஏற்பட்ட அரசியல் நிலைமாற்றம், மறுபுறத்தில் அரசியல் நிலைமாற்றங்களினால் ஏற்பட்ட முன்னுதாரணமில்லா தொடர்பியல் நிலை அம்சங்கள்.

முதலாவது, புலிகளுக்கும், இந்தியப் படையினருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடும் பகைநிலையுமாகும். இது முக்கியமான பல போரியல் நடவடிக்கைகளுக்கும், அரசியல் தீர்மானங்களுக்கும் இட்டுச் சென்றது. பிரதானமாக ஏற்கனவே இடம்பெற்ற வடமராட்சி படை நடவடிக்கை முதல் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள், அந்த இன்னல்களோடு அவர்கள் வாழவேண்டியிருந்த அத்தியாவசியம் மிக முக்கியமானதாகும்.

இரண்டாவது, இந்தக் காலகட்டத்தில் ஏற்பட்ட சாதாரண தொடர்பு சிதைவு முக்கியமானதாகும். வடபிராந்தியம் முழுவதிலும் மின்வலு இருக்கவில்லை. அதன் காரணமாக மின்னியக்க ஊடகங்களான வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் ஆகியன இல்லாத நிலையே காணப்பட்டது. ஊடகக் கருவிகளுக்கான மின்கலங்கள் கூட வாங்கமுடியாத நிலைமை. அச்சு ஊடகங்களைப் பொறுத்தவரையில், கொழும்பைத் தளமாகக்கொண்ட பத்திரிகைகள் வருவதில்லை. யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட பத்திரிகைகள் ஈழநாடு, உதயன், ஈழமுரசு, முரசொலி போன்றவை போதிய சாதனங்கள் இல்லாமலேயே இயங்கவேண்டிய நிலைமை. அவற்றைவிட செய்தித்தணிக்கை வேறு. அரசின் தேவைகள், படையினரின் தேவைகள் என ஒன்றுக்கொன்று முரணான நிலைகள்.

இத்தகைய சூழலில் மற்றைய இயக்கங்கள் கவனம் செலுத்தாதுவிட்ட கொள்கைப்பரப்புகைத் துறையில் விடுதலைப் புலிகள் தொழிற்பட்டனர். அதற்கு அவர்கள் வரையறுக்கப்பட்ட நேரமே ஒலிபரப்பப்பட்ட தங்கள் வானொலியையும், ஒலிநாடாக்களையும், நிதர்சனம் என்ற தொலைக்காட்சியையும் பயன்படுத்தினர். இத்தகைய பணிகளைச் செய்வதற்கென விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்

கழகம் என்ற ஒரு நிறுவகத்தைத் தொடங்கினர். இந்தக் கலை, பண்பாட்டுத் துறையின் வெளியீடுகளாக வந்த பாடல்கள் விடுதலைப் புலி இயக்கத்தினர் செய்யும் சேவைத் தியாகங்களையும், அவர்களது கொள்கை வேட்கையையும் எடுத்துக் கூறுவனவாக இருந்தன. இந்தப் பாடல்களில் முக்கியமான பலவற்றை எழுதியவர் புதுவை இரத்தினதுரை.

தமது பண்பாட்டின் ஒவ்வொரு அம்சங்களிலும் பாடுகைக்கும், பாட்டுக்கும் முக்கிய இடம் வழங்கிய ஒரு மக்கட்கூட்டத்தினரிடையே, குறிப்பாக பட்டுக்கோட்டை, கண்ணதாசன் காலத்துக்குப் பின்னர் சனரஞ்சகப் பாடல்கள் உணர்ச்சி வெளிப்பாடுகளுக்கும், கருத்து வெளிப்பாடுகளுக்குமான வனப்பு நிறைந்த ஒரு ஊடக முறைமையாக விளங்கி வந்த சூழலில் உள்ளவர்களுக்கு - இந்தப் பாடல்கள், அவர்களின் துயரங்களையும் இலட்சியங்களையும், இன்னல்களையும் அபிலாஷைகளையும் வெளிப்படுத்துவனவாகின. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வேட்கைகளையும் வெளிக் கொணர்வனவாக இருந்தன. அத்தகைய பாடல்களுள் மிக்க சனரஞ்சகமாக விளங்கியவை 'வெள்ளிநிலா விளக்கேற்றும் நேரம்', 'இந்தமண் எங்களின் சொந்தமண்' போன்றவை. இந்தப் பாடல்களின் முக்கியத்துவம் அவை பிரச்சாரப் பரிமாணத்தைத் தாழ வைத்து உணர்வு அனுபவங்களை முன்னிலைப்படுத்தியமையாகும்.

உண்மையில் புதுவையின் பாடல்களின் முழுத்தாக்கத்தையும் உணர்ந்து கொள்வதற்கு, அவை இசைப்பாடல்களாகக் கேட்கப்படுவது அவசியம். இவ்வாறு இவர் பாடல்கள் மிகச்சாதாரண நிலையிலுள்ள மக்களால் ரசித்துக் கேட்கப்பட்டதை நான் நேரடியாகக் கண்டுள்ளேன். (1993ல் ஒருநாள் அதிகாலை 4 மணியளவில், வியாபாரத்துக்காகச் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஒருவர் திருநெல்வேலிச் சந்தியில் இறங்கி தேநீர் குடித்து - சுருட்டுப் பற்றவைத்துக்கொண்டு குளிருக்காக, தலையையும் காதையும் மறைத்து தான்போட்டிருந்த போர்வையுடன் சைக்கிளில் ஏறிய நேரம், எங்கிருந்தோ 'வெள்ளிநிலா விளக்கேற்றும் நேரம்' ஒலிபரப்பாகியது. பாடலைக் கேட்டதும் சைக்கிளில் அப்படியே நின்றபடி அப்பாடலை ரசித்துக் கேட்டதை என்கண்ணால் கண்டேன்.) உண்மையில் இப்பாடல்களை எழுதியவர் யார் என்ற கேள்வி அந்த மக்கள் நிலையிலேயே தொடங்கியது. அந்த இரண்டு பாடல்களையும் கீழே தருகிறேன்.

பாடல் 1

## பல்லவி

வெள்ளிநிலா விளக்கேற்றும் நேரம் - கடல்
வீசுகின்ற காற்றில் உப்பின் ஈரம்
தள்ளிவலை ஏற்றிவள்ளம் போகும் - மீன்
அள்ளிவர நீண்டநேரம் ஆகும்.

## அனுபல்லவி

எங்கள் துயர் தெரியாது
என்னவென்று புரியாது
இங்கிருந்து பாடுகின்ற
எங்கள் குரல் கேட்காது

## சரணம்

ஊருறங்கும் சாமத்திலே யாருமற்ற நேரத்திலே
காரிருட்டில் படகெடுத்துப் போவோம் - நேவி
கண்டுவிட்டால் கடலில் நாங்கள் சாவோம்.
பேருமின்றி ஊருமின்றி பெற்றவளின் முத்தமின்றி
ஈரவுடல் கரையொதுங்கும் காலை - புலி
இந்தநிலை மாற்றிடுவான் நாளை

பாயிறக்கிக் கரையினிலே பாதம்படும் வரையினிலே
பார்த்தவிழி பூத்திருப்பாள் மனைவி - என்னை
பார்த்தபின்பே சோற்றை உண்பாள் துணைவி
வாயிறுக்கி வயிறிறுக்கி வாழும்கடல் மீனவனின
வாசலெங்கும் வேதனையின் கோடு - நாளை
வந்துவிடும் எங்கள்திரு நாடு

அப்பன்வலை வீசிவீசி அள்ளிவந்த செல்வமெல்லாம்
அன்னியனின் காலிற்சென்று விழுமோ - புலி
ஆளுகின்ற காலம்நாளை வருமோ

தக்கதொரு தலைவனுண்டு தளபதிகள் வீருண்டு
தங்கத் தமிழீழம் வரும் நாளை - அலை
தாவிக் கடற்புலிகள் வெல்லும் வேளை

பாடல் 2

பல்லவி

இந்தமண் எங்களின் சொந்தமண் - இதன்
எல்லைகள் மீறியார் வந்தவன்
நீர்வளம் உண்டு நிலவளம் உண்டு
நிம்மதி ஒன்றுதான் இல்லை - எனினும்
இந்தமண் எங்களின் சொந்தமண் - இதன்
எல்லைகள் மீறியார் வந்தவன்

சரணம்

நிலைகள் தளர்ந்து தலைகள் குனிந்து
நின்றது போதும் தமிழா - உந்தன்
கலைகள் அழிந்து கவலை மிகுந்து
கண்டது போதும் தமிழா - வரிப்
புலிகள் எழுந்து புயலைக் கடந்து
போர்க்களம் ஆடுது தமிழா - இன்னும்
உயிரை நினைந்து உடலைச் சுமந்து
ஓடவா போகிறாய் தமிழா

சாவா இலையொரு வாழ்வா எனப்பெரும்
சமரே எழுந்தது தமிழா - உடன்
வாவா புலியுடன் சேர்சேர் எனும்குரல்
வரையைப் பிளக்குது தமிழா - இனி
ஆகா அழைப்பிது போபோ எனவொரு
மகவை அனுப்பிடு தமிழா - நீ
பூவா இலைப் பெரும் புயலாய் எழுந்துமே
புறப்பட்டு வந்திடு தமிழா.

உண்மையில் மக்கள் நிலையில் புதுவை அறியப்பட்டது இந்தக் கவித்துவப் பாடல்கள் மூலம்தான். ஏறத்தாழ 1995வரை - வன்னிக்கான பெரும் புலப்பெயர்வு நடைபெற்றவரை பாடல்களே பிரதான இடத்தைப் பெற்றனவாக இருந்தன. முதலாவது பாடல் மிகப் பிரசித்தி பெற்றது. கண்ணனின் இசையும் புதுவையின் கவிதையும் ஒன்றையொன்று முன்னிறுத்தும் பாங்கில் பாடல் அமைந் துள்ளது. போர்க்காலத்தில் கரையோர மீனவமக்களின் வாழ்க்கை அவலம் ஒரு சோக வசீகரத்துடன் முன்னிறுத்தப்படுகிறது.

'இந்தமண் எங்களின் சொந்தமண்' என்ற பாடலில் ஓர் அரசியலியக்க கருத்தொன்றை வற்புறுத்துகின்ற அதே வேளையில் அக்கால ஈழத்தமிழர் வாழ்க்கையில் காணப்பட்ட இன்னல்களையும் வெளிக்கொணர்கின்றது. புலிகள் இயக்கத்திற் சேருவதற்கு பிள்ளைகளை அனுப்புமாறு கோரும் வேண்டுகோள் இப்பாடலில் காணப்படுகிறதெனினும், அதற்கான காரணம் பற்றிக் கூறும்போது தமிழ்மக்கள் படும் இன்னல்களும் வெளிக்கொணரப்படுகின்றன. இவ்வாறு செய்வதால்தான் புதுவை இரத்தினதுரையால் ஒரு குறிப்பிட்ட இயக்கத்திற்கான ஒரு கவிஞனென்ற நிலைக்கு அப்பாலே, மேலே சென்று தமிழர் படும் இன்னல்களை எடுத்துக் கூறும் கவிஞனாக மக்கள் நிலையில் மதிக்கப்பட முடிந்தது.

இவ்வாறு ஏற்கப்பட்டமைக்கு பிரதான காரணம் பாடல் களின் இசைக் கவர்ச்சியும்தான். பாடலின் இசைக்கவர்ச்சியுடன் பாடுபவர்களின் நெகிழ்ந்த குரலும் இணைகின்றபோது கவர்ச்சி அதிகமாயிற்று. இசை, உணர்ச்சி பாவத்திற்கு அழுத்தம் கொடுக்க, உணர்ச்சி பாவத்தினை குரல்கள் நெகிழ்வுடன் காட்ட அவற்றி னூடே புதுவையின் வரிகளின் கவித்துவம் முன்னிறுத்தப்பட்டது.

இயக்கத்தின் செயற்பாடுகளை உணர்ச்சிபூர்வமான முறை மையில் பொது தமிழ் மக்களுக்கு தொடர்புறுத்தும் இந்தப் பணி முக்கியமானது. ஏனெனில் அந்த இயக்கத்தின் போராளிகள் பற்றிய ஒரு விருப்புப் படிமம் மக்கள் மனதிலே உணர்ச்சி சூழ் விம்பங்களாக நிலை நிறுத்தப்படுவதற்கு இந்த பாடல்கள் உதவுகின்றன. இதற்கு இணையாக ஏறத்தாழ இதே அளவு முக்கியத்துவத்துடன் அமைவது இவர் இயக்கத்தை சார்ந்தவர்களிடையே தமது எழுத்தினால் ஏற்படுத்திய ஒரு சுய மதிப்பீட்டுப் படிமமாகும். 'உலைக்களம்' என்ற இவரது தொகுதிக்கு எழுதப்பட்டுள்ள முன்னுரைகளை நோக்கும்

போது, பிரதானமாக இயக்கநிலைநின்ற வாசகர்களுக்கென வெளியிடப்படும் உத்தியோகபூர்வ ஏட்டில் வந்த இவரது எழுத்துக்கள் எவ்வாறு இயக்கத்துக்குள்ளேயே மதிக்கப்பட்டன என்பதைக் காட்டு கின்றன. இயக்கத்தினருக்கு அவர்தம் நடவடிக்கைகளை ஒரு குறிப்பிட்ட அளவிற்குத் தொலைநிலைப் படுத்தி அந்த நடவடிக் கைகளின் முக்கியத்துவத்தை காட்டுகின்ற புதுவையின் சித்திரிப்பு மிக முக்கியமான ஒன்றாகவேபடுகிறது. தொடர்பியலில் உள்ளுடு தொடர்பு முறைமை *(Intrapersonal)*, ஆளுக்காள் தொடர்பு முறைமை *(Interpersonal)* என்று இரண்டு நிலைப்படுத்திக் கூறுவார்கள். சற்று உன்னிப்பாக நோக்கும் போது, புதுவையின் எழுத்துக்களுக்கு இத்தகையதொரு இரு கிளைப் பரிமாணம் நிலவியுள்ளமையை எளிதில் புறக்கணித்துவிட முடியா துள்ளது.

இவ்வாறு நோக்கும்பொழுதுதான் நவீனதமிழ் கவிதை வரலாற்றில் அல்லது அதற்கு முன்னரும்கூட இவ்வாறு ஒரு அரசிய லுக்கான சமூக ஒருங்குசேர்ப்பு இயக்கமொன்றுக்காக அதன் தேவை களைப் பூர்த்திசெய்யும் வகையில் கவிதை பயன்படுத்தப்படுகின்ற ஒரு முறைமை தமிழில் முன்னுதாரணமற்றதாகவே உள்ளது. இங்கு கவிதை, அதாவது இலக்கியம் ஒரு சமூக அரசியல் இயக்கத்திற் கான தேவையாகிறது. அவ்வாறு கூறுவதிலும்பார்க்க புதுவையின் கவிதை அவர் புலிகள் இயக்கத்தில் சேர்ந்ததன் பின்னர் அத்தகைய ஒரு பயன்பாட்டுக்கு உதவுகின்றது என்பது முக்கியமான ஒரு விடயமாகவே படுகிறது. இதனைக் கூறும்பொழுது உண்மையில் கவிதையின் பயன்பாடே முக்கியப்பட்டு நிற்கின்றது. ஒரு குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் புதுவையின் கவிதைகள் இந்த வகிபாகத்தைப் பெறுகின்றன என்பதுவே இலக்கிய வரலாற்று நிலைநின்று பார்க்கும் பொழுது முக்கியமானதாகப்படுகிறது.

## VI

மேற்கூறிய இலக்கிய நிகழ்ச்சியின் அசாதாரணத் தன்மை ஏற்றுக்கொள்ளப்பட்டால் அது நம்மை இன்னொரு கட்டத்துக்கு இட்டுச்செல்லும். இந்த வகிபாகத்தைப் பூர்த்தி செய்வதில் புதுவை இரத்தினதுரையின் கவித்துவ ஆளுமை எவ்வாறு, எம்முறையில் அதனை செய்து கொள்ளுகின்றது என்ற வினாவிற்கு நாம் வரு வோம். இது ஒரு மிகமுக்கியமான வினா.



தமிழ் ஆவணகம் Tamileelam Archive

இதற்கான வரலாற்று முன்னுதாரணத்தைக் காலனித்துவ காலத்திற்கு முன்னர் பார்ப்பது வரலாற்று முரணாகும். பிரித்தானிய காலனித்துவத்தின் சமஸ்கிருதத்தை முன்னிறுத்திய இந்திய ஒருமைக் கோட்பாடும் அந்த இந்திய ஒருமைக் கோட்பாட்டினால் தன்னை முன்னிறுத்திக்கொண்ட பிராமணீய வைதீகவாதமும் தமிழரை, தமிழர் வாழ்வைப் பின்தள்ளுவதை எதிர்ப்பதற்கான குறியீடுகளாக முதலில் மொழியையும் பின்னர் மதத்தையும் இணைத்துப் போராட்டம் நிகழ்த்தும் ஒரு போக்கு தமிழ்நாட்டில் காணப்படுகிறது.

தமிழியக்கம் அரசியல் இயக்கமாக மாறியதன் வரலாறு இதற்குள் கிடக்கிறது. இந்தத் தமிழியக்க வரலாறு பாரதிக்குப் பின்னர் தமிழ்நாட்டு திராவிட இயக்கங்களின் செயற்பாடாகிறது. அக்கட்டத்தில் அது மொழியைப் பிரதானப்படுத்தியே பேசியது. தமிழின் மீட்பு என்பது அந்த மொழியினது மேன்மை மீட்பு, அந்த மொழியினது மேன்மை வரலாற்று மீட்பு என்ற நிலைப்படவே இருந்தது. ஈழத்திலோ தமிழ் அரசியற் போராட்டத்தில் ஒரு சிறு அழுத்த வேறுபாடு இருந்தது. சுதந்திரத்தின் பின்னர் இது ஒரு மொழிப் போராகவே நின்றது. மொழி நிலைப்பட்ட போராகவே பேசப்பட்டது, எடுத்துக்கூறப்பட்டது. தனிச்சிங்கள மொழிச்சட்டம், தமிழ் மொழியின் நியாயமான அளவுப் பிரயோகம் என்ற பதப்பிரயோகங்களிலெல்லாம் மொழியே பிரதானப்பட்டு நின்றது. 1949இலிருந்து வந்த தமிழரசுக் கட்சியும் மொழியை பிரதானப்படுத்திக் கூறுவதாகவே இருந்தது. உண்மையில் இதனால் தமிழகத்தில்கூட ஏற்படாத அளவிற்கு ஈழத்தில் ஒரு மொழிக்கான அழுத்தம் இருந்தது.

காசிஆனந்தன், சச்சிதானந்தம் போன்றோருடைய கவிதைகள் இந்நிலைப்பாட்டின் முக்கியமான உதாரணங்களாகும்.

*"சாவில் தமிழ் மணந்து சாகவேண்டும் - எந்தன்*
*சாம்பல் தமிழ் கமழ்ந்து வேகவேண்டும்"*

என்ற சச்சிதானந்தத்தின் வரிகள் இந்தப் போக்கினை முன்னிறுத்தி நிற்கின்றன. இத்தகைய முறையில் மொழி நிலைப் படுத்தி, மொழி வேட்கையை அரசியல் உந்துசக்தியாகக் கொண்டு தொழிற்பட்டுக் கொண்டிருந்த ஓர் அரசியல் சூழலில் இரத்தினதுரை யின் கவிதைகள் அந்த அருந்தற்பாடுகளை முற்றிலும் மனிதநிலைப் படுத்தி மனித அவலங்களாகவே காட்டுகின்ற ஒரு நிலை ஏற்பட்டது.

அரசின் அடக்குமுறைப் போக்கும் மனித ஒடுக்குமுறை முறைமையி லேயே அமைந்தன.

சித்திரவதை, கொலை போன்ற ஒடுக்குமுறை நடவடிக் கைகள் 1974 - 1977 காலத்திலிருந்தே தொடங்கிவிட்டன. 80களில் இயக்க ஒழுங்கமைப்புப் போக்குகள் இறுக்கமுடையனவாக படிப்படி யாக ஒரு போர்நிலைச் சூழலே தவிர்க்கமுடியாது மேற்கிளம்புகிறது. இந்த மானுட ஒடுக்குமுறை அரசை எதிர்க்கும் இளைஞர்களுக்கு அப்பாலே சென்று ஒட்டுமொத்தமான மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாதமாகவே மாறியது.

இந்தச் சூழலில் மக்களின் இன்னல்களையும், மக்கள் படும் துன்பங்களையும் தனது இயக்கத்து வீரர்களின் தன்நலமற்ற தியாக வீரத்தையும் பாடத்தொடங்குகிற புதுவை, அந்த ஒடுக்கு முறையின் மனித உபாதைகளுக்கு, மானுட இன்னல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்.

வெகுஜன நிலையில் விரும்பி இரசிக்கப்பட்டனவாகிய, 'இந்தமண் எங்களின் சொந்தமண்....' பாடலையும் நெய்தற் பாடலையும் மீண்டும் உதாரணமாகக் கொண்டு இது தொழிற்பட்ட முறையினைப் பார்ப்போம் 'இந்தமண்....' பாடலில் வரும் 'நிம்மதி ஒன்றுதான் இல்லை' என்ற வரி, அந்தப் பாடலின் கருத்துக்கே அச்சாணியானது.

நெய்தல் பாடலில் வரும், "பேருமின்றி ஊருமின்றி பெற்றவளின் முத்தமின்றி ஈரவுடல் கரையொதுங்கும் காலை" என்ற வரி நமது பண்பாட்டு வட்டத்தினுள் இறப்பிலும் பார்க்க மோசமாகக் கருதப்படுவது அநாதையாக இறப்பது என்பதைச் சொல்லுகிறது. புதுவையினுடைய பாடல்களின் அடிநாதமாக இருக்கும் கவித்துவ ஊற்று இந்த மானுட இழப்புத்தான். இறுதிச் சரணம் உண்மையில் இயக்கத்திற்கான பரப்புரையே என்றாலும் இவர் அந்தக் கருத்துப் பரப்புரையை மானுட இழப்பு என்ற பின்புலத்திலேயே சொல்கிறார். இப்படிக் கூறுவது நான் மேலே கூறிய இரண்டு தேவைகளையும் ஒரே முயற்சியில் நிறைவு செய்கின்ற தன்மையாகும். இந்த மானுடநிலைச் சித்தரிப்புத்தான் புதுவைக்கு முக்கியத்துவத்தைக் கொடுக்கிறது. இந்த மானுடநிலை ஆற்றாமை அவரது பொது வுடைமையின் மனிதநேய நிலைப்பாட்டின் ஊடாக வருவதாகும்.



Tamileelam Archive

அதற்கான உதாரணங்களை, 'வானம் சிவக்கிறது', 'ஒரு தோழனின் காதல் கடிதம்' ஆகியவற்றிலே நிறையக் காணலாம்.

மானுட நேயத்தின் அடிப்படையில் எழும் சோகமும், அவலமும் அதுகாலவரை இத்தகைய இன்னல்களுக்கு ஆட்படாதிருந்த மக்களின் காதுகளில் அவர்கள் ஒவ்வொருவரினதும் அநுபவமாகவே விழுந்தது. இந்த மானுடநேய அடிப்படை, மானுட சிதைவு ஏற்படுத்தும் துயரம், வெளிப்படுத்தப்பெறும் கவித்துவ எடுத்துரைப்பு முறை யாது என்பது அடுத்து நோக்க வேண்டிய முக்கியமான விடயமாகும்.

புதுவை இரத்தினதுரையின் கவித்துவம் அவர் காட்டும் யாழ்ப்பாணத்து சாதாரண மக்களது வாழ்க்கைமுறை சித்திரிப்பாகும். அந்த வாழ்க்கைமுறை சித்திரிப்பினை இத்தொகுதியிலுள்ள சில பாடல்கள் கொண்டே காட்டலாம். உதாரணமாக, இக் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள 'மார்கழி அழகு' என்னும் கவிதையில், மார்கழி மாதத்தின் வசீகரம் - இந்தக்கவர்ச்சி அந்த வாழ்க்கையினூடாக வருவதொன்று. பனிமூட்டம் மூடிய தார்த்தெரு, சற்றுத் தூரத்தே கோயில் மணி, திருவெம்பா பூசையின் அரோகரா ஒலி, ஏற்கனவே எழும்பி குளித்து வந்த மனைவி எழுப்புதல் விவரணங்களாக சொல்லப்படாது ஒவ்வொன்றும் அழகியற் படிமங்களாக, அதாவது அந்த வாழ்க்கைப் பெருவோட்டத்தினுள் வருகின்ற கவர்ச்சி மிகுந்த கணங்களாக / *closeup* காட்சிகளாக வருகின்றன.

வாழ்க்கையின் அன்றாட நீரோட்டத்தினுள் நின்று திரும்பிப் பார்த்து அவதானிக்காத அழகியற் காட்சிகள் இந்தக் கவிதையில் ஒரு காண்பியமாக, *camera*வின் அசைவாக நகருகின்றன. அதே வேளையில் பயன்படுத்தப்படும் மொழி அந்த அநுபவத்திற்கு அப்பாலானவையாக அல்லாமல் அதற்குள்ளேயே நிற்கும் தன்மை "மார்கழி மாதம் மகாலட்சுமி" என்கின்ற அந்த குறிப்புரை. இந்த சித்திரிப்பின் பலம் என்னவென்றால் இவ்வாறு சித்திரிக்கப்படும் காட்சி இன்று அரிதாகிவிட்டமைதான். நமக்கு உடனே அந்த ஞாபகங்கள் வருகின்றன.

இத்தகையதொரு படிமத்தின் அடர்த்தியினை புலம் பெயர்ந்த நண்பனுக்கு எழுதும் கடிதத்திலும் நிறையக் காணலாம்.

*'உடல் பனிவிழும் தேசத்திலென்றாலும்*
*மனமின்னும் முற்றத்து மாமரத்தைச் சுற்றியே*
*அந்தரிப்பதை அறிந்து கொண்டேன்......'*

இவை உண்மையில் பதச்சோறாக அமையும் உதார ணங்கள்தான். புதுவையின் கவிதைகள் பெரும்பாலானவற்றில் இப்பண்பைக் காணலாம்.

இவ்வாறு நமக்குப் பழக்கமானவையும் நினைத்து நினைத்து இன்புறத்தக்கவையுமான கணங்கள், சந்தர்ப்பங்கள், சூழல் விவரணங்கள் அமைகின்ற பொழுதில், அந்தக் கவிதையின் வார்த்தைகள் நெஞ்சில் தைக்க வைப்பவை அந்த அவதானிப்பி னுள் காணப்படும் ஒரு முக்கிய இயல்பாகும். பாடும் பொருள் பற்றிய முழுத் தோற்றத்தையும் அந்தக் காட்சி அமைப்புக்குள் நிற்பனவாகிய மிகமிகச் சிறிய விடயங்களையும் சேர்த்துக் கொள்வது ஒரு நல்ல ஓவியன் பின்புல வர்ணத்தின்மீது கைலாவகத்தினரல் அழுத்தியும் மெலிவித்தும் காட்டும் தன்மை போல் அமைவதை உணரலாம். இந்தத் தொகுப்புக்கான தலையங்கமே அந்த மனப்பாங்கின் வெளிப்பாடுதான். தழைத்து இறுகி கொப்புக் கொப்புக்களாய் பச்சை நிறமாக மேலே தெரியும் பூவரசம் வேலி யோடு புழுவைத் தேடி தத்தித்திரியும் அந்த மிகச்சிறிய அழகான பறவையும் இந்த பதிவுக்குள் வந்துள்ளது. பருவரைவும் நுண்ணிய தான குறிப்பும் *(the macro and the micro)* அந்த கவிதைகளை காண்பிய *(visual)* தன்மையுடையனவாக ஆக்குகின்றன. இந்த இயல்பினை புதுவையின் பாடல்களில் பரக்கக் காணலாம்.

மனக்கிளர்வினை ஏற்படுத்தும் படிமங்கள் சுட்டும் உணர்வாழம் ஒரு முக்கியமான விடயமாகும். சில படிமங்கள் சங்க இலக்கியத்து கருப்பொருள் போல. அதாவது, அவைக் குள்ளிருந் துதான், அல்லது அவற்றினுள்ளே வாழும் பொழுதுதான் அந்த உணர்ச்சி பிறக்கும். அவ்வாறு மேற்கிளம்புகின்ற உணர்ச்சி, உண்மை நெடியுள்ளதாக இருக்கும். இன்னொன்று, பேசப்படும் அனுபவத்திற் குள்ளிருந்து வராது உணர்வுக் கவர்ச்சிக்காக அள்ளித் தெளிக்கப்படும் குறிப்புக்களும் மனக்கிளர்வை ஏற்படுத்துவனதான். ஆனால், அந்த வாழ்வின் யதார்த்தத்திற்குள்ளிருந்து வருபவையல்ல. உணர்ச்சிகளை கிளப்பவேண்டுமே என்பதற்காக பயன்படுத்தப்படுபவை. (இக்கால

திரைப்படக் கவிஞர்கள் சிலர்பற்றிய விமர்சனத்தில் இந்த உண்மை உள்ளது.)

புதுவையின் கவிதைகளில் இந்தக் காண்பியப் படிமங்கள் திரும்பத்திரும்ப வருகின்றன என்பது உண்மையே. இவரது பாடுபொருளின் ஒட்டுமொத்தமான பண்பு காரணமாக - அதாவது ஒரு வாழ்க்கை முறையின் இழப்பு பற்றிய ஆதங்கம் - இக்குற்றச்சாட்டு இதுவரை முனைப்புப் பெறாமலே உள்ளது. ஆனால் இவருக்குக் கவிதைகளை நிறைய எழுத வேண்டிய தேவை ஒன்று உள்ளது என்பதைப் பார்க்கும் பொழுது இப்படிமங்களின் மீள்வருகை தவிர்க்க முடியாததாகின்றது. இது இவரது கவிதைகளுக்குத் திரும்பத்திரும்ப இடம்பெறும் படிமங்கள் வருகின்றன என்ற ஒரு குற்றச்சாட்டைக் கொண்டுவரலாம்.

புதுவையின் கவிதைகளைக் கால அடிப்படையில் ஒருங்கு சேர வைத்துப் பார்க்கும் பொழுது ஒரு காலப்பகுதியில் அவரது வன்மையான கண்டனத்திற்கு உட்பட்டவை, பிறிதொரு வேளையில் போற்றிப்பாடப்படுவதைப் பார்க்கலாம். இதற்கு நல்ல உதாரணமாக விளங்குவது, சிங்களமக்கள்பற்றி இரத்த புஷ்பங்கள (பக்.38) தொகுதியில் வரும் வாசலில் நெருப்பு மூளும் கவிதையில் இடம்பெறும் குறிப்புகளும், இத்தொகுதியில் வரும். 'அம்மாவுன் வாசலில் நிற்கவா போகவா' என்ற கவிதையில் வரும் குறிப்புகளும் ஆகும்.

உண்மையில் இதனை ஒரு அடிப்படை முரண் என்று கொள்ள முடியாது. ஏனெனில் கவிதை பிரதானமாக உணர்ச்சியின் மொழி என்ற வகையில் கவிஞனின் அவ்வவ்வேளை உணர்ச்சி நிலைகளை அவை பிரதிபலிக்கும். இந்த முரண் எப்பொழுது வருமென்றால் அடிப்படைக் கருத்துநிலையில் பிறழ்வு ஏற்படும் பொழுதுதான். இந்தப் பாடல்களில் புலம்பெயர் மக்கள்பற்றிய இவரது கவிதைகள்பற்றியும் இத்தகைய ஒரு அவதானிப்பு உண்டு. இவற்றை விளங்கிக்கொள்ள வேண்டுவதற்கான திறவுகோல், மேலே கூறப்பட்டதுதான்.

இவ்வாறு சொல்லும் பொழுது, புதுவை இரத்தினதுரை எனும் மனிதனதும், அவரது கவித்துவ ஆளுமையினதும் பிரதான இயல்பு ஒன்று வெளிவருகிறது. அதாவது ஒவ்வொரு கட்டத்திலும் அல்லது வேளைகளிலும் தான் 'உணர்கின்றதை' உணர் முறைமை

பற்றிய ஒளிப்பு மறைப்பு இல்லாமல் கூறுவதுதான். அந்த அளவில் இவரது படைப்புக்களிலே ஒரு 'நேர்'மை தொனிப்பதை எடுத்துக் கூறல் அவசியமாகும்.

இவ்வம்சத்தை முதனிலைப்படுத்திக் குறிப்பிடும்பொழுது இந்த 'உணர்ச்சி வெடிப்பு'ம், 'படிம மீள்வருகை'யும் இன்னொரு மட்டத்தில் அவருக்கு ஒரு நிரந்தர இரசிகர் கூட்டத்தைப் பேண உதவியுள்ளது என்பதை குறிப்பிடுதல் அவசியமாகிறது. குறிப்பாக புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்கள் பலர் இவரது பாடல்களின் இறுவட்டுக்களை *(CD)* இரசித்துக் கேட்பதற்குக் காரணம் இந்தப் படிமங்கள் ஏற்படுத்தும் தாய்நாடுபற்றிய மனக்கதகதப்பேயாகும். புலம்பெயர் நிலையில் சென்றவர்களின் சமனற்ற கல்வி நிலையினை மனங்கொண்டு நோக்கும்பொழுதுதான் இந்தப் பாடல்களுக்கான கேட்குநர் வட்டம் எத்துணை முக்கியமானது என்பதும், எத்தனை இறுக்கமானது என்பதும் புலனாகிறது. புதுவையின் கவிதைமொழியும் இந்த இரண்டு நிலைகளையும் தழுவியே நிற்கின்றது. கவிதைக்காக ஒரு செந்நெறி மொழிநடையினை கையாளும் பண்பு புதுவையிடம் இல்லை. புதுவை உண்மையில் தான் வளர்ந்த வாழ்க்கைச் சூழலிலிருந்தே தனது கவிதைக்கான மொழியையும் பெற்றுக்கொள்கிறார். அந்த மொழியின் ஓட்டம் அந்த வாழ்க்கையின் சூழல் பற்றிய மனப்பதிவைத் தானாகவே ஏற்படுத்தும்.

இவரது கவிதையின் மொழிநடையின் ஓசை ஒழுங்கு குறிப்பாக ஆரம்பகாலத்தில் தனது அநுபவத்தை இன்னொரு வருக்கு எடுத்துச் சொல்வதாக, எடுத்துரைப்பதாக (Narrate) அமைகின்றது. இவருடைய மொழியோட்டத்தைப் பார்க்கும்போது, இவர் தனது 'அலை வரிசை'யிலுள்ள ஒருவருக்கு சொல்லுவது போன்றே அமைகிறது. ஆனால் அண்மைக்காலத்து (பாடல்கள் தவிர்ந்த) கவிதைகளைப் பார்க்கும் பொழுது சொல்லொழுங்கின் ஓசைக் கோப்புக்குள் நின்றுவிடாது ஓசை நியமங்களுக்கு வெளியே/மேலே செல்லவேண்டியதை உணருகின்றார் என்பதும் இத்தொகுதியில் வரும் பல கவிதைகளிலிருந்து தெரியவருகிறது.

உண்மையில் தமிழில் புதுக்கவிதைக்கான ஒரு முக்கிய மான நியாயப்பாடு, தமிழின் இன்றைய கவிதை, குறிப்பாக அதன் உணர்முறைமை சாதாரண மரபுவழி வாழ்க்கைக்கு அப்பாலுள்ளன வற்றை தொடவேண்டிய, உணரவேண்டிய, உணர்த்தவேண்டிய

தேவைகள் இருப்பதனால் அந்த உணர்வுமட்டத்தை எட்டுவதற்கான ஓர் அமைவுமுறையினை வேண்டிநிற்கின்றது எனலாம். அதாவது இதன்வழியாக வேண்டப்படும் உணர்திறனும், மரபையும் பாரம்பரியத்தையும் பேசுகிற வேளையிலும்கூட அவற்றின் வரன் முறையான கட்டுக்கோப்புகளுக்கு அப்பாலேயோ அல்லது வெளியேயோ நின்றுதான் அவற்றை எடுத்துக்கொள்வதோ, அவற் றைப்பற்றி பேசுவதோதான் முறைமை எனக் கொள்வதால் யாப்பிறுக் கத்துக்குள் அகப்படாத ஒரு 'வெளி'யில் நின்று பேசத்தூண்டுகிறது.

இதனாலேதான் நான் முன்னர் சில இடங்களில் கூறியுள்ள படி, செம்மையான மரபுவழித் தாடனமுடையோரே புதுக் கவிதை யின் திறந்த நிலையை வேண்டுகின்றனர். இந்தத் தேவை, இப்பொழுது புதுவை இரத்தினதுரைக்கு அதிகரிக்கின்றது என்றே சொல்லவேண்டும். அதனாலேயே பெரும்பாலான கவிதைகள் புதுக்கவிதைகளாகவே வருகின்றன என்று கொள்ள வேண்டியுள்ளதெனக் கருதுகிறேன்.

இன்னுமொரு சுவாரசியமான பண்பு, யாழ்ப்பாணத்துக் கிராம வாழ்க்கையின் படிம மீட்புக்குள் மத உணர்வும் வருவதுதான். நல்லூரைப் பற்றிப் பாடிய பாடல்கள் உண்மையில் அப்பாடல் களினூடே தெரியும் ஆழமான நம்பிக்கை (விசுவாச) உணர்வு. இதனை இப்பொழுது புலம்பெயர் நாடுகளிலுள்ள கோயில்களுக்கு பாடிய பாடல்களிலும் காணக்கூடியதாக இருக்கிறது. ஒளிவு மறை வற்ற ஒரு மார்க்சியவாதியிடத்து இத்தகைய உணர்வு வருவதும் விவாதத்திற்கான ஒரு விடயப் பொருளாகியுள்ளது. அதற்குக் காரணமே ஒரு பொருளாதாரக் காரணிதான். அதாவது வாழ்தளத்தின் தர்க்கரீதியற்ற திடீர் மாறுகை. இது நம்பிக்கைகள், பெறுமானங்கள் பற்றிய ஒரு விடயமாக மாறிவிடுகிறது. அத்தகைய வேளையிலே தான் மதம் தேவைப்படுகிறது. (சில வேளைகளில் சாதாரணமாகி விட்ட மத நியமங்கள், மதவழிபாட்டு/முறைப்பாட்டு நியமங்கள் போதாதென்று தங்களைத் தாங்களே ஓர் உணர்வு விளிம்பு நிலைக்கு கொண்டு சென்று உரத்த ஓசையுடன் வேண்டுதல்களை வெளிப்படுத் தும் நடைமுறைகளை புதிய மதங்கள் வற்புறுத்துவதை இங்கே மனங்கொள்ளல் வேண்டும்.) புதுவையின் பாடல்களுள் ஒரு நம்பிக்கை ஸ்திரப்பாடு காணப்படுவது ஆச்சரியமில்லை.

புதுவையின் கருத்துநிலைத் துணிபும் கவித்துவ ஆளு மையும் அவரை இன்றைய சராசரித் தமிழ் மனிதனின் குரலாகவும்

அதிலும்பார்க்க முக்கியமாக அவனுக்கான கவிதைக் குரலாகவும் வைத்திருப்பதைக் காணலாம். பொதுவான எல்லா மனிதர்க்கும் உள்ளது போலவே, இதுவே அவரது பலமும் பலவீனமும் ஆகிறது. பலம் ஈழத்துத் தமிழர்களின் சமகால அனுபவங்கள் பற்றிய தொடர்புறுத்துவோனாக உள்ளமையாகும். அந்த ஸ்திரநிலை அவரது கவிதைகளின் பெருத்த வேறுபாடுகளை ஏற்படுத்தாதமை அதிலும் பார்க்க ஏற்படுத்த விரும்பாதிருப்பமை அவரிடத்திலுள்ள குறைபாடாக எடுத்துக் கூறப்படுகிறது.

இந்த விமர்சனங்களுக்கு அடித்தளமாக வேரோடிநிற்கும் ஒரு முக்கிய உண்மை ஒன்றுண்டு. புதுவையைப்பற்றி நறுக்குத் தெறித்தாற்போல், இரண்டு அபிப்பிராயங்கள்தான் இருக்கும். ஒன்று அவர் மனப்பூர்வமாக விரும்பப்படுவது. மற்றது மனப்பூர்வமாக விரும் பப்படாமலிருப்பது.

இதற்குக் காரணம் புதுவையின் கருத்துநிலை. புதுவை யினது அரசியல் தளம். அவற்றை ஏற்றுக்கொள்ள விரும்பாதவர் களுக்கு புதுவை குறைபாடுகள் நிறைந்த ஒரு கவிஞராகவே காணப் படுவார். உண்மையில் குறைபாடுகள் பூதக்கண்ணாடிகளால் தேடப் படும். ஆனால் இலக்கிய வரலாற்று நிலைநின்று பார்க்கும் பொழுது இந்தக் கவிஞன் குறிப்பிட்ட இந்த அரசியற் போக்கின் பாடுநன் ஆக இருக்கிறான். அந்த வகிபாகம் அந்த இயக்கத்தின் வரலாற்றி னுள்ளும் இந்த மக்களினது வரலாற்றினுள்ளும் பிரித்துவிடமுடி யாது நிற்பதாகும். தரம்பற்றிய வாதவிவாதங்களுக்கு அப்பால் புதுவைக்கு அந்த இடம் நிச்சயமாக உண்டு. தர நிலையில் பல ருக்கு அவன் எங்கள் வாழ்க்கை மாறுதல்களின் சோக அசைவு களை எதிர்கால நம்பிக்கைகளை கூறுபவனாக இருப்பான். சிலருக்கு அவற்றை அந்த முறையில் கூறுவதாலேயே ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவனாகிறான்.

வரலாறு என்பது தவிர்க்கப்பட முடியாதது பற்றிய ஸ்திரமான பதிகையாகும்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி

# பூவரசம் வேலியும்
# புலுனிக் குஞ்சுகளும்

Tamileelam Archive

# புலுனிக்குஞ்சு

காலநதிக்கரையில் கால் நனைத்தவாறு நீள நடக்கின்றேன். கரையோரம் என் சுவடுகள் கிடக்கின்றன கவிதைகளாக. நாளாந்தமான புதிய விதிகளின் பிறப்பில் என் கவிதைகளிலும் வேண்டியன நிலைத்தும், வேண்டாதன அழிந்தும்போக எஞ்சியவற்றில் வாழ்வேன் நான். என் வாழ்வும், என் எழுத்துமே நான் உலகுக்குச் சொல்லும் செய்தி. இவை இரண்டையும் மீறி என்னைப் பிரகடனப்படுத்துவது தேவையற்றது.

வாழ்வையும், எழுத்தையும் வகைபிரித்து அதுவேறு, இதுவேறு எனச் சொல்லும் இரட்டை வாழ்வு எனக்கென்றுமே இருந்ததில்லை. மற்றவருக்குச் சொல்லமுன்னர் நானே என் எழுத்துக்கு உயிருள்ள சாட்சியாக இருக்க விரும்புகின்றேன். இதனாற்தான் விடுதலையை அவாவுறும் கூட்டத்திலொருவனாய் என் வாழ்வு அர்த்தத்துடன் கழிகிறது. உயிர்ப்புடன் இந்த உலகமிருப்பதாயும் என்னால் உணரமுடிகிறது. வெறுமை, தனிமை, அந்நியம், மந்தை பிரிந்தேகும் மனநிலை ஏதுமற்று சமுத்திரத்தில் ஒரு துளியாய், பெருவிருட்சத்தில் ஒரு துளிராய் என்னால் இருக்க முடிகிறது.

மனுக்குலத்தின், என்னினத்தின், நான் வாழும் காலத்தின் மகிழ்ச்சி, துயரம், வெற்றி, தோல்வி, வாழ்வு இவை தவிர, தனிப்பட்ட வாழ்வும், உணர்வும் எனக்கில்லை. இவற்றைப் பாடி நகர்கிறது என் கவிநதி.



Tamileelam Archive

மொத்தப் பிரபஞ்சமுமே எனக்குமானதெனும் நினைப்பில் ஒரு வாழ்வு சமைத்து அதற்குள்ளே என் நாளாந்தம் கழிகிறது.

அந்தஸ்துக்காகவோ, அங்கீகாரத்துக்காகவோ, சாவுக்குப் பின்னும் வாழ்வதற்காகவோ நான் எழுதுவதில்லை. என்னால் இனிப் பொறுக்கமுடியாது எனும் நிலை என்னைப் பிடித்து இருத்தும்போது மட்டும் எழுதுவேன். அவை கவிதைகளா இல்லையாயென்பதும் எனக்குத் தெரியாது. அது பற்றிய கவலையும் கிடையாது. நல்ல கவிஞனாக இருப்பதிலும், நல்ல மனிதனாக இருப்பதே என இலக்கு. இதற்காக என்னை வனைந்தபடி நாளாந்தம் போகிறது. எவரையும் என் பாதம் மிதியாது. என்னையும் எவரும் மிதிக்க அநுமதியேன். விட்டு விடுதலையான ஒரு சிட்டுக்குருவியின் கட்டற்ற வாழ்வின் கச்சிதமே நான் அவாவுறும் வாழ்வு. இதற்கான பாதையில் என் கவிதைகளும். போதுமெனக்கு.

அந்திமத்தில் வந்ததுக்கான பணி முடித்துப் போகிறேனெனும் திருப்தியுடன் வாழ்வு முற்றிற்று எனச் சாவுத்திரை விழுவதே சந்தோஷம். மரண பயமற்று 'எடுத்துச்செல் என்னை' என நான் காலத்துக்கு என்னைக் கையளிப்பேன். இந்தளவு வல்லமை எனக்குண்டு. இந்த உலகில் நானிருந்த இடம் வெறுமையுறும்போதில் 'தனது கடமை முடித்தேகினான் ஒரு கவிஞன்' என ஓரிரு வாய்கள் பேசினால் போதும். இதறகாக நான் எழுதிக்கொண்டு மட்டும் இருக்கவில்லை. பணி செய்து கொண்டுமிருக்கிறேன். எழுதுவதிலும் பார்க்க மேலானது, எழுத்திலிருக்கும் சத்தியத்திலும் பார்க்க அதிகமாக என் வாழ்விலிருப்பதே. தொடர்ந்தும் இருப்பேன் இத்திசைவழி.

இந்த வேலியையும் குஞ்சுகளையும் பற்றிய தன் கருத் தெழுதியளித்த பெருமதிப்புக்குரிய பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களுக்கும், நூலாக்கத்தில் பெரும்பணியாற்றி ஆதாயமேதுமின்றி என்னை அழகுசெய்யும் இனிய இளவல் பொ.ஐங்கரநேசனுக்கும் நன்றிகள். கவிதைகளைக் கணினிப் பொறியில் பதித்தளித்த தங்கை மு.தெய்வநாயகிக்கும், தம்பி த.பிரசாத்துக்கும், சரவைபார்த்த அண்ணர் சு.பேரின்பநாதனுக்கும் அன்பு. அட்டையில் என்னை ஓவியமாக் கியதுடன் நூலின் உள்ளேயும் ஓவியங்களை வரைந்து உதவிய தமிழக ஓவியர் ட்ரொஸ்கி மருதுவுக்கும், ஒளிப்படங்களைத் தந்துதவிய அமரதாஸுக்கும் நன்றி. நூலாக்கத்தில் தம்மை முழு

ஈடுபாட்டுடன் இணைத்த தம்பி வளநாடனுக்கும், நண்பன் தெ.மதுசூதனனுக்கும் அன்பு. புலம்பெயர்ந்த பின்னும் என்மீதும், என் கவிதைமீதும் பேரன்பு கொண்ட கவிஞர் அரிமாஅழகன், எஸ்.நர்த்தனகுமார், ந.ரகுராம், தா.நவநீதன், கவிஞர் கிருஷ்ணா அம்பலவாணர் ஆகியோருக்கும் அன்புரைத்தேன். விடுதலைமீதான என் பெருவிருப்புக்கு நம்பிக்கைதரும் வெளிச்சமாகவும், ஆதர்ஸ மாகவும் நின்று ஆற்றுப்படுத்தும் எமது தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்களுக்கும், என்னை எனக்கே அறிமுகம் செய்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்கும், அடேல் அன்ரிக்கும், தம்பி சு.ப.தமிழ்ச் செல்வனுக்கும், வரலாற்றுக் கடமைக்கான யாத்ராவின் சுமைதாங்கி நடக்கும் சக தோழமைப் போராளிப் பயணிகளுக்கும், நன்றியெனும் வெற்றுவார்த்தையைத் தவிர கொடுப்பதற்கு வேறென்ன உண்டு என்னிடம்?

காலம் இனியுமெனக்குக் கருணைசெய்யுமெனில் மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்
புதுவை இரத்தினதுரை

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.
28.02.2005



# தூரப் பறந்துவிட்ட துணிவுப் பறவைகளே!

நேற்றுவரை நீங்கள் நேரிருந்தீர்;
கண்களிலே
பூத்ததுபோற் பூத்துப் புன்னகைத்தீர்.
எங்களுடன்
பேசிக்களித்தீர்; போய்விட்டீர்.
தாயகத்தில்
வீசிவரும் காற்றில்
விரித்த சிறகெடுத்து
தூரப் பறந்துவிட்ட துணிவுப் பறவைகளே!
ஈரவிழியிங்கு எமக்கின்னும் காயவில்லை.
ஊரறியோம்
உங்கள் உறவறியோம்
தந்தையிட்ட பேரறியோம்

ஆனாலும் புகழறிந்து நிற்கின்றோம்.
நெஞ்சினிலே உங்கள் நினைவுக்கு மாலையிட்டு
நஞ்சணிந்தோம்.
நீங்கள் நடந்தவழி நடக்கின்றோம்.
தம்பியென்றும்;
அண்ணன் தங்கையென்றும்
எங்களுக்கோர்
வம்சவழி தோன்ற வாழ்ந்தோமே;
ஒன்றாகி
வந்தபகை வீழ்த்த
வரிசையிட்டுப் போனோமே.
செங்குருதி பாய்ந்து திசை சிவந்து
எதிரிகளின்
தங்ககங்கள் யாவும் தணலிற் கருக்கியபின்
வென்ற களிப்பில் வீடு வந்தோம்.
அன்றிருந்து
இன்றுவரை உம்மை எவ்விடத்தும் காணலையே.
கல்லறைக்குள் நீங்கள் கண்மூடித் தூங்குவதாய்
சொல்லுகிறார்
உங்கள் தேகம் தூங்காதே.
மொட்டவிழும் பூவினிலே முகம் தெரியும்
கல்லறைக்குக்
கிட்டவர உங்கள் கண் தெரியும்
வீசுகின்ற
காற்றினிலும் மூச்சுக் கலந்து
எம்மை உயிர்ப்பிக்கும்.
இனிக்
கூற்றெனவே வரும்பகையைக்
குடிப்போம்
வென்றிடுவோம்.
□□

வெளிச்சம்
கார்த்திகை 1993

# அள்ளிவர ஏன் ஆசை வரவில்லை

வடித்து இறக்கினால்
ரோஜா நிறத்தில் பூத்திருக்கும்
'பூநகரி' மொட்டைக்கறுப்பன் சோறு,
கரைத்துக் காய வைத்த
களிமண்போல
பசைப் பிடிப்பாகக் குழையும்
'பலாலி' மரவள்ளிக் கிழங்குக் கறி,
'பொன்னாலை'ப் பாலத்து சிறுதிரளிக் குழம்பு
எல்லாம் குழைத்து ஒரு கவளம்

செத்தவன் நாக்கிலும் நீரூறும்.
உண்டு மகிழ்ந்து எத்தனை நாளாச்சு?
சாப்பிட்ட வாய்க்கு ஒருபிளவு பாக்கும்,
சாறு பிழியும்
'மாவிட்டபுரத்து' குருத்து வெற்றிலையும்
வாய்க்கு ருசி.
சாப்பிட்டால் நாக்குச் சிவக்கும்
எத்தனை நாளாச்சு?
எங்கள் நிலம்
எங்கள் கடல்
ஆனால் போக முடியவில்லையே
உனக்கேன் கோபம் வரவில்லை?
மொட்டைக் கறுப்பனை மறந்து
சீனத்துப் பச்சையுடன் திருப்தி கொண்டாயா?
'ஆனையிற'வில் உப்பு வீணில் கரைகிறது
அள்ளிவர உனக்கேன் ஆசை வரவில்லை?
இழந்தவற்றை மீளப்பெற
எழும்பு.
□□

வெளிச்சம்
மார்கழி 1993

# சிறகு விரிக்கத் துடிக்கும் ஒரு சின்னப் பறவை

*பாலைச்சரித்து நிலவு விளையாடும்*
*பௌர்ணமி நாள்.*
*விளக்கணைக்கக்கூடப் பலமில்லாத*
*மெல்லிய காற்று.*
*வானச்சுவரில் முகில்கள் அப்பிக்கிடக்க*
*நிலவு நிர்வாணமான சாமப்பொழுது.*
*வயல்வெளியை உச்சிபிரித்த*
*செம்மணி வீதியில் நடக்கின்றேன்.*
*வெள்ளத்தாற் கடலான தரவைவெளி.*
*இடையில் வந்த சுடலையில்*
*சடலமொன்று தணல்பூத்துக் கிடக்கிறது.*
*என் காலடி அரவத்தால்*
*கரையேறிய நண்டுகள்*
*வளைக்குள் உடல்மறைத்துக் கொள்கின்றன.*
*ஓலமிட்டபடி உயரப்பறக்கும்*
*அடையாளம் தெரியாத புள்ளினங்கள்*
*ஆட்காட்டியா? மீன்கொத்தியா?*
*எதுவாகவும் இருந்துவிட்டுப் போகட்டும்*
*அழகாகப் பறக்கின்றனவே அதுபோதும்.*
*இவைபோலப் பறக்க முடியாதா?*
*எனக்கும் சிறகு முளைத்தால்*
*எத்தனை ஆனந்தம்.*
*பேயும் உறங்குகின்ற பொழுது இதுவாமே*
*எனக்கு மட்டும் ஏன் உறக்கம் வரவில்லை?*
*"நாற்பதுக்கு மேலே தூக்கம் இருக்காது"*



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

*சரியாகச் சொன்னவனின் வாயில்*
*சர்க்கரை போடவேண்டும்.*
*நாவற்குழிப் பாலத்தின் மேலே*
*வெளிச்சங்கள்.*
*என்ன அது?*
*அட பாரமேற்றிய*
*வண்டில்கள் வருகின்றன.*
*வேகமாக ஒரு 'பிக்கப்' மின்னலென வந்து*
*என்னைக் கடந்து உருவுகின்றது.*
*"பாவம் பொடியளுக்கும் நித்திரையில்லை"*
*சின்ன வயதில் எத்தனை பாரம் சுமக்கின்றனர்.*
*உழைப்பவனுக்கு உறக்கமில்லை என்பது*
*எவ்வளவு உண்மை.*
*அழகு விரித்து*
*ஆட்சி நடத்துகின்ற*
*நிலவுநாள் நெஞ்சுக்கு நிறைவு.*
*இந்த எழிலை இவ்வூர் பருகாமல்*
*கடைவாய் வழியக் கண்மூடிக் கிடக்கிறது.*
*தூக்கத்தில் அப்படியென்ன சுகமிருக்கிறது?*
*யாழ்ப்பாணம் பாலைவனமென்று*
*யார் சொன்னவன்?*
*அவனை அழைத்துவா.*
*கள்ளியும், நாகதாளியும்,*
*நாயுருவியையும் தவிர*
*உள்ளே வேறென்ன உண்டு*
*என்ற கவிஞனை எழுப்பி வா.*
*எம் மண் எத்தனை எழில் என்று*
*செம்மணியை இப்போது காட்டவேண்டும்.*
*சோம்பேறிகள் தூங்கிக் கிடப்பார்கள்*
*எங்கே தேடுவது?*
*வீரம் வரும்போதுதான்*
*மீசை துடிக்கும்.*
*அது போல*
*போராடும் போதுதான் எல்லாமும் பொலிவுறும்.*
*குண்டு வீச்சால் சிதறுண்டு போன*



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

• புதுவை இரத்தினதுரை

*கட்டிடங்கள் கூட*
*நவீன ஓவியங்கள் போல*
*அழகாகத்தானே தெரிகின்றன.*
*அப்படியாயின் அழிவே அழகா?*
*இல்லை*
*சிலரின் தேகத்தில் தேமல்கூட அழகாக இருக்குமே*
*அது போலத்தான்*
*எங்கள் மண்ணில்*
*எல்லாமே அழகுதான்.*
*மண்டைதீவிலிருந்து ஏவிய*
*எறிகணை வெடித்து*
*அரியாலைப் பக்கம் அதிர்கின்றது.*
*கோழிகள் ஏறும் மரத்தில்*
*மரநாய் புகுந்ததுபோல*
*ஊர் கலங்கி விட்டது.*
*எதிரியுள்ளவரை அழகை அனுபவிக்க முடியாது.*
*முத்திரைச் சந்தைக்கு முகம் காட்டி*
*நான் திரும்பி நடக்கின்றேன்.*
*வேகமாக ஒரு 'பிக்கப்' மின்னலென வந்து*
*என்னைக் கடந்து உருவுகின்றது.*
*இனி விடியும்.*
□□

*வெளிச்சம்*
*தை 1994*

# நிமிர்

இனிவரும் நாட்களில்
இளவேனில் கருக்கட்டும்
மாருதம் தவழ்ந்து செடி கொடி தழுவும்.
முதிர்ந்த இலையுதிர்ந்து
மரங்கள் புதிதாய்ப் பிறக்கும்.
முற்றத்து வேம்பிருந்து
குக்கூவென்று குயில் பாடும்.
ஆடுகால் பூவரசுகள் அசையும்.



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

துலாக்கள் உடற்பயிற்சி செய்யும்.
அறுகுபடர்ந்த வரம்பில்
ஆடுகள் அணிவகுக்கும்.
பச்சைப் பாவாடைகட்டி
தோட்டங்கள் அழகுகாட்டும்.
விடிகாலை எழில்பூட்டி வெளியேவரும்.
சந்தைக்குப் போகும் வண்டில்களின்
சக்கரச் சத்தம் பூபாளமாகும்.
வரும் காலம் வசந்தம்.
எம்மண் இனி அழகு.
எதிரிக்கு எங்கே இது தெரியும்
இந்த வசந்தத்தையும் எரியூட்டுவான்.
வெடிக்கும் எறிகணைகளுக்கு
விரல்மடித்துக்கொண்டு
காப்பரணுள்
நாங்கள் கண்துயில்வோம்.
இது கொடுமை
இறப்புக்கு நிகர்.
இந்த வருடத்து மந்த மாருதத்திலும்
கந்தகக் கலப்பா?
ஏற்றுக் கொள்ளக் கூடாது.
வீதியெங்கும் வெளிச்சம் ஊற்றி
விடிய விடியத் திருவிழா வேண்டும்.
வல்லிபுரக் கோவிலுக்கு
வண்டில் பூட்டு நிமிர்ந்து நின்று
நிலவு பார்க்கவேண்டும்
நிமிர்.
□□

வெளிச்சம்
மாசி 1994

# மார்கழி அழகு

*சுற்றிய போர்வை விலக*
*சுருக்கென்று குத்திய குளிர்*
*என்னைத் தட்டிவிட எழுந்தேன்.*
*அதிகாலை*
*வெளியே வந்தபோது*
*அரவமற்றிருந்தது தெரு.*
*கறுப்புச் சேலை விரிப்பாய்*
*நீண்ட தார் வீதியில்*
*என்னைப்போல் ஓரிருவர்.*
*மார்கழி அழகு 'மகாலட்சுமி'*



Tamileelam Archive

உண்மையை ஒப்புக்கொண்டாக வேண்டும்.
சும்மா சொல்லக் கூடாது
மார்கழி மாதம் பேரழகு.
எட்டு மணிவரை கட்டிலிற் கிடப்பவனுக்கு
இந்த எழில் எப்படித் தெரியும்?
நல்லூர் மணியடிக்கும்
நாலரை மணிக்கு
கொள்ளையழகு கொலுவிருக்கும்.
வாசலுக்கு வந்து பார்த்தால்
மார்கழி அழகு 'மகாலட்சுமி'.
"ஆதியும் அந்தமுமில்லா"
பள்ளியெழுச்சிப் பாடல்கள்
ஒவ்வொன்றும்
முடிய,
முடிய
அந்தமணியும்,
அரோகராச் சத்தமும்,
முடியும், துணியும் முறுக்கிய
கூந்தலில்
நீர் சொட்ட வந்தெழுப்பும்
என் மனைவி அழகும்
எல்லாம் ஒன்றாகி
மார்கழி அழகு 'மகாலட்சுமி'.
□□

ஈழநாதம்
16.02.1994

## புலரத் துடிக்கும் பொழுதும் ஒரு தூக்கம் வராத கவிஞனும்

*நேற்றும் காற்றில்லாப் புழுக்கம்*
*கழுத்து வியர்வையால் தலையணை நனைந்து*
*மேனி பிசுபிசுத்த போது கண்களைத் திறந்தேன்.*
*நேரம் என்னவாக இருக்கும்?*
*அடுத்த வீட்டுக் கடிகாரமணிக்காகக் காத்திருந்தேன்.*
*தூரத்தில் வீரிட்டு ஒரு பிள்ளை அழுதது.*
*தாயின் முலை வாயில் புகுந்ததோ?*
*அழுகையை நிறுத்தி அமைதியானது.*
*எழுந்து முற்றத்துக்கு வந்தேன்*



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive


ஊமை நிலவு மேக மரங்களுக்குப் பின்னால்
ஒளித்து விளையாடியது.
அடுத்த வளவுச் சடைத்த வேம்பில்
வௌவால்கள் விழுந்து கொண்டிருந்தன.
கசக்கும் மரத்தின் பழங்களுக்காக
இவைகள் தங்களுக்குள் ஏன் கடிபடுகின்றன?
எனக்கு எரிச்சல் வந்தது
என்றாலும் என்ன செய்யமுடியும்?
மண்டைதீவு இராணுவ முகாமில்
'அவர்கள்' விழித்திருக்கின்றார்கள்
என்பதைச் சொல்லி ஓரிரண்டு வெடிச்சத்தங்கள்
அதுவும் பின்னர் அடங்கிப்போனது.
அயலை எழுப்பி,
உறக்கம் கலைத்து,
பயணம் சொல்லிப் போவதுபோல,
பக்கத்திருக்கும் பருத்தித்துறை வீதியால்
மண்ணெண்ணையும்,
மரக்கறி எண்ணையும்,
கலந்து குடித்த வாகனம் ஒன்று
இரவின் எழிலை இல்லாதழித்து
உறுமிக் கொண்டு ஓடிச்சென்றது.
என்னுள் மீண்டும் எரிச்சல் முளைத்தது.
அடுத்தவீட்டுக் கிணற்றில் இருக்கும்
கப்பியும், கயிறும் புணரும் சத்தம்.
'மனோன்மணி அம்மன்' கோவில் குருக்கள்
குளிக்க வந்ததைக் குறிக்கும் சத்தம்.
அப்படியாயின் மூன்று மணியா?
ஐயமே இல்லை மூன்று மணிதான்.
வழக்கம் போல நாய்கள் குரைக்க
கையில் விளக்கேந்தியபடி
பூப்பறிக்கும் பண்டாரம் வந்து
முற்றத்து தேமா மரத்தை
மொட்டை அடித்துவிட்டுப் போனார்.
நல்லூர்மணி நான்கு மணிக்கு அடித்தது.
நாதவெள்ளம் காதை நிறைத்து



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

வேதனைகளை வெளியேற்றியது.
நெஞ்சில் இருந்த நெருஞ்சி முட்கள் வெளியே வந்தன.
மூச்சு இலகுவாகி சுவாசம் சீரானது.
"வேல் வேல் முருகா வெற்றி வேல் முருகா"
உரத்துப் பாடியபடி
வெளி வீதியை
தானே விலைக்கு வாங்கியவன் போல
ஒருவன் சொந்தம் கொண்டாடியபடி சுற்றிவந்தான்.
அயலிலுள்ள கிணறுகள் எல்லாம்
ஆரவாரப்பட்டன.
கிழக்கு வானம் வெளுக்கத் தொடங்கிய போது
காகங்கள் வந்து கத்தித் தொலைத்தன.
இரவில் இருக்கும் சுகமும், அழகும்
பகலில் தொலைந்து போவது எங்கே?
நாளையும் விடியும் தானே
அதற்காகக் காத்திருப்பேன்.
அநுபவிப்பதிலும் பார்க்க
காத்திருப்பது சுகமானது.
□□

வெளிச்சம்
பங்குனி 1994



# பனிவிழும் தேசத்து நண்பனுக்கு பதிற்கடிதம்

*நண்பனே!*
*மன்னிக்க,*
*பதிலெழுத நாட்களாயின.*
*வன்னிக்குப் போயிருந்தேன்*
*வந்ததும் கடிதம் மேசையிலிருந்தது*
*படித்ததும் எழுதும் பதில்.*
*துயருரைத்த வார்த்தைகளில்*
*உன் விழிநீர்க் கறைகள்*
*என்மனம் இரங்கியது.*



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

• புதுவை இரத்தினதுரை

உடல் பனிவிழும் தேசத்திலென்றாலும்
மனமின்னும் முற்றத்து மாமரத்தைச் சுற்றியே
அந்தரிப்பதை அறிந்துகொண்டேன்.
புலம் பெயர்ந்த பறவையின்
கூடுதிரும்பும் அவாவுணர்ந்து
மகிழ்ச்சி.
இவ்வளவு தானென்றாலும்
இதுவே போதும்.
தாய்மடி நினைவுகள்
கரையாதிருப்பதே திருப்தி.
கலங்காதே
காலமொருநாள் கணக்கெழுதும்
வானப்பயணம் முடித்து வருவாய்.
அந்நிய நாடொன்றில்
அறியா முகங்களிடையே
உன்னை எவன் தேடுவான்?
அவசரங்கள் எதிர்மோதும் காலையில்
எவனுன்னைக் கவனிப்பான்?
நதிக்கரை ஒதுங்கிய சருகாகி
கிடப்பது துயரம்தான்.
என்ன செய்வது
இசைந்து போக அசைந்து கொள்.
சிகரங்கள் எழுந்த வீதியில்
'தகரம்பிள்ளையார்' கோவிற்திருவிழாவையும்,
கச்சான் கடைகளையும்,
காப்புக் கடைகளையும்,
மேற்குவீதி மேளக்கச்சேரியையும்
அசைபோடல் ஆகாது.
பழையன மீட்டல் பழுது.
புதிய மண்ணில் வேர்விடப் பழகிக் கொள்.
ஊர்ப் புதினம் கேட்டாய்
வழமை போல் எல்லாமும் வந்து போயின.
பள்ளியின் பரிசளிப்பும்
வாசிகசாலை வருட விழாவும்
நடந்து முடிந்தன.

*வரதலிங்க அப்புவின் பேத்தியும்,*
*செல்வராசா அண்ணரின் மகனும்*
*'போக வேண்டிய இடத்துக்குப்' போய்விட்டனர்.*
*உனக்குப் புரியும்.*
*மற்றும்*
*இளங்கலைஞர் மன்றத்து இசைவிழாவும்,*
*சட்டநாதர் கோவிற் திருவிழாவும்*
*ஆயிரம் அழகோடு நடந்தன.*
*வாசுதேவ நாணயக்கார வந்து போனார்.*
*தடைகளை நீக்கென்று*
*முந்தைநாள் பெரிய ஊர்வலம்*
*நானும் கலந்தேன்.*
*நீயும் இங்கேயே இருந்திருக்கலாம்*
*போனது பெரிய பிழை.*
*உன் 'புவனத்தை' அடிக்கடி காண்பேன்*
*ஒரு புன்னகையை உதிர்த்து விட்டு*
*போய்விடுவாள்*
*அவள் பாவம்.*
*ஜேர்மனிக்குப் போய்விட்ட*
*நாகலிங்கத்தார் வீட்டில்*
*இப்ப 'பொடியளின்ர முகாம்'.*
*உயரத்துக்கு தகரமடித்த வேலி*
*ஒன்றும் தெரியாது.*
*வருவார்கள் போவார்கள்*
*சிலநாளில் விளக்கெரியும்.*
*"எதிரிகளின் பாசறையைத் தேடிப் போகிறோம்"*
*அடிக்கடி இந்தப் பாடல் கேட்கும்.*
*ஒருநாள் கருவேப்பமிலை வாங்க*
*சின்னப் 'பொடியன்' வந்தான்;*
*சீருடையில் இருந்தான்.*
*என்ன கறியென்றேன்*
*இறைச்சிக் குழம்பென்றான்.*
*ஊர் கேட்டேன் சொல்லவில்லை.*
*பேர் கேட்டேன்*
*பெரியண்ணன் என்றான்.*

*எத்தனை சண்டைக்குப் போனாய்?*
*சும்மா பகிடிக்குத் தான் கேட்டேன்*
*பூநகரியோடு ஏழு என்றான்.*
*நான் விதிர் விதிர்த்துப் போனேன்.*
*வீரம் விளைந்து அறுவடைக்குக் காத்திருக்கும்*
*இந்த மண் வித்தியாசமானது.*
*இந்த மண்ணில்,*
*இந்த நாட்களில்,*
*இருந்தேனென்பதே*
*எனக்குப் போதும்.*
*உனக்கு?*
*சேர்ந்து வாழப் பழகிக் கொள்*
*அல்லது திரும்பி வந்து சேர்.*
*எல்லோரும் நல்ல சுகம்.*
*பதில் கண்டு*
*அடுத்த பதில்.*
*தாமதத்துக்கு மீண்டும் மன்னிக்க.*
*உன் அன்பு நண்பன்.*

*........................*

*ஈழநாதம்*
*07.04.1994.*

# மேகம் விளையாடட்டும்

மின்னல் குடியிருக்கும் கண்களைத் திறந்து
கைகளை வீசு
புயல் புறப்பட்டுப் போகட்டும்.
எடுத்து வைக்கும் காலடி ஒவ்வொன்றுக்கும்
இடிமுழக்கங்கள் கேட்கட்டும்.
நட; காலம் உனக்கு கைகட்டும்.
வான் பரப்பெங்கும்
பிணந்தின்னிக் கழுகுகள்
போடும் எச்சத்தால்
கீழே குடியிருப்புக்கள் தீப்பிடிக்கின்றன.
ஒவ்வொரு வீட்டு வாசலிலும்
ஒப்பாரி கேட்கிறது.
இத்தனையையும் மீறிக்கொண்டு
சின்ன அலகால் சுள்ளி பொறுக்கி
எங்கள் மரங்களில் குருவிகள் கூடுகட்டுகின்றன.
மேய்ச்சலுக்குப் போகும் மாடுகள்
கன்றீன்று பால் சுரக்கின்றன.
வாழும் வழி இதுதான்.
நிமிர்ந்து கொள்
மேகம் உன் தலை தடவி விளையாடட்டும்.
□□

வெளிச்சம்
சித்திரை - வைகாசி 1994

# நெருஞ்சி எரிந்து நீறானால்
# அறுகு படர்ந்து அழகாகும்

இன்று வெள்ளிக்கிழமை.
ஆரதக்கறியுடன் உண்ட அசதி
திண்ணையில் அயர்ந்து விழித்த போது
அந்த நினைவு வந்து மிதந்தது.
'கோட்டை முனியப்பரை'த் தரிசித்து எத்தனை காலம்?
செல்லுமிடம் சொல்லாமல்
சைக்கிள் ஏறி மிதிக்கத் தொடங்கினேன்.
எதிர்காற்று என்றாலும் தொடர்ந்து முன்னேறி

பத்துமைல் கடந்து வந்தபோது
'பண்ணைக்கடல்' குருதியில் குளித்துக்கொண்டிருந்தது.
சூரியன் மஞ்சள் வெய்யிலை விசிறிவிட்டு
பாதியுடல் கடலுக்குள்ளும்,
மீதியுடல் வெளியிலுமாக விழுந்து கிடக்கின்றான்.
வைகாசிமாதத்து இளந்தென்றல் மேனிவருட
இதமாக இருந்தது.
'முனியப்பர் கோவிலின்' சடைத்த மரங்களில்
குடியிருக்கும் பறவைகள் கூடுதிரும்புகின்றன.
'சல்வீனியா' பூண்டு படர்ந்து 'புல்லுக்குளம்' கூட
எட்ட இருந்து பார்க்கும்போது எழிலாகத்தான் இருக்கிறது.
'இடிந்த நூல் நிலைய'மும், 'திறந்தவெளி அரங்கு'ம்
தங்கள் இருப்பை இழந்த நிலையில்
தேடுவாரற்று ஒதுங்கிக் கிடக்கின்றன.
பக்கத்தில் 'வீரசிங்கம் மண்டபம்'
பார்க்கப் பாவமாக இருக்கிறது.
'றீகல் தியேட்டர்' முன்பாக
தார்வீதி பிளந்து புல் முளைத்திருக்கிறது.
கும்பகர்ணன் தூங்குவதுபோல 'கோட்டை' கிடக்கிறது.
நெருஞ்சி படர்ந்திருக்கும் 'முற்றவெளி'
'உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு உயிர்ப்பலி நினைவுக்கற்கள்'
நித்திரை விழித்துக் கட்டிய 'முத்தமிழ் விழா மேடை'
எல்லாவற்றையும் பார்க்க நெஞ்சுக்குள் நெருப்பு மூண்டது.
அந்தக் கால நினைவுகள்
நெஞ்சில் அலையெறிந்து கொள்ள
பழையன கரையொதுங்கிக் கொண்டன.
பஸ் நிலையத்திலிருந்து நூல் பிடித்த மாதிரி
நேராக ஓடிவரும் 'மூத்திர ஒழுங்கை' முகப்பில்தான்
அந்தத் 'தேனீர்க்கடை' இருந்தது.
பக்கீஸ் பலகைச் சுவரும் தகரக் கூரையுமாய்
எந்த நேரமும் நல்ல வியாபாரம் நடக்கும்.
உழுந்துவடை ருசியாக இருக்கும்.
'பிளேன் ரீ' ஐந்துசதம்தான்.
'காற்று வாங்கவரும் கவிஞர்கள்' கூடி
இங்கேதான் கல்பணிஸ் கடிப்பார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

எங்கே அந்தக்கடை? இருந்த சுவடே தெரியாமல்
ஒத்தியெடுத்துத் துடைத்தது யார்?
வாரத்தில் மூன்று நாட்களுக்கென்றாலும்
வீரசிங்கம் மண்டப வாயிலில் வாழை கட்டியிருக்கும்
பூச்சரம் கட்டிச் சோடித்திருக்கும்.
காஞ்சிபுரமும் கனகாம்பரமும் வாசலில் வரவேற்கும்.
சந்தனமும் பன்னீரும் மூக்கிலடிக்கும்.
மின்கம்பத்தில் கட்டிய பெரிய புனலுக்குள்ளிருந்து
கே.பி. சுந்தராம்பாள் பாடுவார்.
சில நாட்களில் 'சீர்காழி' பாடிக்கொண்டிருப்பார்.
ஐயோ என்ன இது கூட்டுறவுக்கு என்ன நடந்தது?
இந்திரமாளிகையை இடித்தது யார்?
பக்கத்துப் பள்ளத்தில்தான் ரீகல் தியேட்டர்
ஆங்கிலப் படங்களுக்கு ஏங்குபவர்கள்
இங்கேதான் 'தாகம்' தணிப்பார்கள்.
மாலை 4.45க்கு ஒரு காட்சி
பள்ளிப்பிள்ளைகளுக்கு மெத்தவசதி
'நல்ல பிள்ளைகளாக' வீடு திரும்புவார்கள்.
இதென்ன கூரையற்ற குட்டிச்சுவர்
அப்போ ரீகலுக்கு என்ன நடந்தது?
இங்கேதான், இந்த இடத்தில்தான்
ஆவிபறக்கும் 'காரம் சுண்டல்' வண்டிலுடன்
ஒருவன் வாசலில் நிற்பானே;
உப்பு, புளி, வெங்காயம், மிளகாய்
எல்லாம் கலந்து சுடச்சுடத் தருவான்.
ஒரு சுருள் போதும் அறுசுவை அறியலாம்
நாக்கு சப்புக் கொட்டுகிறது
அவன் எங்கே தொலைந்து விட்டான்?
நெருஞ்சி படர்ந்துள்ள முற்றவெளி
முன்னரெனில் இப்படியா கிடக்கும்
அறுகு படர்ந்து அழகாய் இருக்கும்.
கோட்டை அகழிக்கரையில்
நெஞ்சில் கனவுகள் விதைத்த 'காதற் பறவைகள்'
கூடியிருந்து கொத்துப்படுவர்
கதைப்பது காற்றில் வராது காதோரம் நின்றுவிடும்

இடைக்கிடை மின்னலடிக்கும் சிரிப்பு மட்டும் தெரியும்.
'சென்றல் கொலிச்' மைதானத்துக்கு
விளையாடப்போகும் விடலைகள்
விசிலடித்துக் கொண்டு போவார்கள்.
காற்று இங்கு மட்டும்தான் இலவசம்
மற்றெங்கும் விலையதிகம் என்பதுபோல
வாங்கத் தினசரி வந்து கூடும் 'பென்சன்காரர்கள்'.
சாமானியரின் சின்னக் கனவுகளையெல்லாம்
நிராகரித்துவிட்டு, புதுயுகம் தேடிய
யாழ்ப்பாணத்துக் 'கனவு எழுத்தாளர்கள்'
இவர்களால் முற்றவெளி பூத்துக்கிடக்கும்.
சித்திரை மாதத்து அக்கினி நாளென
இன்று இவையெல்லாம் எப்படி எரிந்து போயின?
பண்ணைக் கடலையும் பார்த்து விடலாம்
கால்கள் நடக்கத் தொடங்கின.
"அண்ணர் நில்லுங்கோ" திரும்பினேன்.
தூக்க முடியாத துப்பாக்கிச் சுமையுடன்
சீருடை தரித்த சிறுவன்.
"என்ன தம்பி?"
அங்காலை போனால் "ஆமி சினைப்பண்ணுவான்".
அட எட்டும் தூரத்தில் எதிரி
எப்படி எம்மண் சிரித்தல் கூடும்?
நன்றியை உதிர்த்துவிட்டுத் திரும்பி நடக்கின்றேன்.
சீருடை தரித்த சிறுவனே!
உன்னால் மீண்டும் இவை எல்லாம் உயிர்க்கட்டும்.
முனியப்பர் கோவிலின்
பின்னேரப் பூசைக்குப் பெரிய மணி அடிக்கிறது
இனி எல்லாமும் பச்சை நிறமாகும்.
□□

வெளிச்சம்
சித்திரை - வைகாசி 1994

# நேற்று இன்று நாளை

தங்கத் தகடடித்துத்
தகதகக்கும் வானமது
மஞ்சள் குளித்து மகிழும்
பொன்மாலையிலே
சூடாறிக் கொண்ட சூரியன் போய்;
மிக விரைவாய்
தேரேறி மேற்குத் திசை பார்த்துச் செல்லுகின்ற
நேரமதில்,
பச்சை நிறமான நெல்வயலில்
ஈரம்சுவற,
இடுப்பொடியப் புல் பிடுங்கி
மீளும் இளம் பெண்கள் மிடுக்காய்
நடைபயில்வர்.
ததும்பி வழிகின்ற
தாமரைப்பூம் பொய்கையதில்
குவிந்து,
ஊர்ச்சிறுவரெலாம் குதித்துக் கலக்கிடுவர்.
மாடெல்லாம் மேய்ந்து
மடிநிரப்பி
வரம்பேறி
வீடு திரும்ப வெளிக்கிட்டு
உடல் நெளிக்கும்.
'அரசவெளிஅம்மன்' ஆலயத்துப் பூசைமணி
தரவை வயல் கடந்து தாவி
ஊர் எல்லைவரை
விரையும்.
நீரள்ளி வீடேகும் சிற்றிடையார்
காற்சலங்கையோசை
கல்லொழுங்கை மீதிருந்து

*மேற்கிளம்பி*
*இளசுகளின் மேனியிலே கிளுக்கிண்டும்.*
*விழுதெறிந்த ஆலவிருட்சத்தின் கீழிருந்து*
*பொழுதுபடும் வரையும் பேசிக்கழிக்கின்ற*
*கிழடுகளும் மெல்லக் கிளம்பி நடைபயில்வர்.*
*தோட்டக்கிணற்றின் துலா இருந்து*
*பாட்டு வரும்,*
*காட்டுக் கொடி சிலிர்த்துக் கண்மலரும்.*
*சில்லென்று*
*கற்றைக் குழல் கலைத்து*
*காற்று வந்து விளையாடும்.*
*அற்புதமாய் எல்லாம் அழகொளிரும்.*
*கிராமத்து*
*வற்றா எழில் கவிதை வரம்புக்குள் சிக்காது.*
*நேற்றிருந்த வாழ்வை நினைத்தால்*
*நெஞ்சத்தில்*
*தீப்பிடித்துக் கொள்ளும்.*
*தித்தித்த வாழ்க்கையினி*
*எப்போது?*
*எங்களுக்கு ஏனிந்தத் தண்டனைகள்?*
*கப்பிக்கிடக்கும் இருள் கலைவதினி எக்காலம்?*
*குயிலிருந்து பாடிய எம்கொம்புகளில்*
*மீண்டுமினி*
*குயிலிருந்து பாடிக் குதுகலித்தல் எப்போது?*
*எறிகணையும்,*
*குண்டு ஏற்றிவந்து வீசுகின்ற*
*வெறிகொண்ட 'புக்காரா' விமான இரைச்சலதும்,*
*குழிவிழுந்த வீதிக் குலுக்கல் பயணமதும்,*
*வழிதெரியா கும்மிருட்டு வாழ்வும்,*
*பசி வயிறும்,*
*பஞ்சு விளக்கும், பயம் பிடித்த முகங்களதும்,*
*பிஞ்சில் சொரிகின்ற பிணியும்*
*எம்மண்ணிருந்து*
*என்றகலும்?*
*எல்லாம் எழிலாதல் எப்போது?*

• புதுவை இரத்தினதுரை

அஞ்சற்க!
எங்கள் அடுத்த தலைமுறைக்குள்
'நஞ்சணிந்தவீரர்' நாடமைப்பர்.
நடக்கின்ற
வெஞ்சமரை வென்று
வீதியெங்கும் முரசறைவர்.
வேலியொன்று போட்டு
வெறிநாய்கள் உட்புகுந்து
காலில் கடிக்காமல்
காவலுக்கு நின்றிருப்பர்.
தென்றல் தடவிச் செல்லும்.
திசையெங்கும்
கன்றெல்லாம் துள்ளும்.
கறவையெலாம் பால்சொரியும்.
நாதஸ்வரத்தோடு
தவில், வீணை, மத்தளங்கள்
பேசும்.
மரங்களெலாம் புதிதாய் துளிர்த்துவரும்.
பூசுமஞ்சள் கரைந்து
பொன்னாறு ஓடுதல்போல்
வாசம்சுமந்து வழிநடக்கும்
வீதியெங்கும்
காற்சலங்கை மீண்டும் கலகலக்கும்.
பூமரங்கள்
பூத்துச் சொரியும்
'புலம்பெயர்ந்த குருவி'யெல்லாம்
கூடுதிரும்பும்
கோயிலெல்லாம் கொடியேறும்.
நாடு திரும்பி நம் கையில் வந்ததென்று
பாடும் குரலெல்லாம் பரவும்.
அஞ்சற்க!
□□

வெளிச்சம்
ஆனி 1994

# குடையாவது பிடிக்கலாம்

*இன்று நடை தளர்ந்தும்*
*நரை விழுந்தும் தள்ளாடும்*
*ஐம்பது வருடங்களுக்கு முந்திய இளைஞர்களே!*
*வெள்ளைத் தோல் சீமான்கள்*
*வீடு திரும்ப மூட்டை கட்டியபோது*
*நீங்கள் ஏன் ஊமையானீர்கள்?*
*தலைப்பாகை கட்டிய சந்தனப் பொட்டுகளை நம்பி*
*நீங்கள் ஏமாந்து போனீர்கள்.*
*மீண்டும் ஒரு இலையுதிர்வுக்குப் பின்னர்*
*புதிதாகத் துளிர்த்தெழுந்த*
*'ஐம்பத்தெட்டில்' அடிவாங்கிய தலைமுறையே!*
*தேசியச்சாயம் கரைந்து*
*சிங்கக் கொடியைப் பூச்சி அரித்தபோது*
*ஒட்டுப்போட ஊசிநூல் தேடி நீங்கள் தோற்றுப்போனீர்கள்.*
*வழமையான அஸ்தமனத்துக்குப் பின்*
*கிழக்கில் புதிய உதயங்கள்.*
*மண்ணின் தேவர்கள் மாலையும் கையுமாய்*
*விடுதலைக்குத் தாலிகட்ட விரைகின்றனர்.*
*பிஞ்சுப் பாதங்கள் நோகலாம்*
*பாரச் சிலுவை தோளை அழுத்தலாம்*
*நிழலற்ற நீண்ட பாலையெனினும்*
*அவர் பயணம் தொடரும்.*
*நிழலற்ற பாதையல்லவா வாருங்கள்*
*அவர்களுக்குக் குடையாவது பிடிக்கலாம்.*
□□

*வெளிச்சம்*
*ஆடி 1994*



# வயல்வெளிப் பிள்ளையார் கோயிலின் நித்திய பூசையும் பத்துநாள் திருவிழாவும்

*எங்கள் சிறு ஊரின்*
*விரிந்த வயல் வெளியின் அந்தத்தில்*
*அந்தக் கோவில்.*
*வண்டிப் பாதை உண்டு*
*ஆனால் சுற்றி வரவேண்டும்.*
*ஒற்றை வரம்பே ஊருக்கு வசதி.*
*வரம் கேட்க வருவோர் மிகக்குறைவு.*
*நேரே வருவதற்கு ஊருக்கு நேரம் கிடையாது.*
*மணிச்சத்தம் கேட்கும்*
*எட்ட இருந்து தலையில் குட்டிக் கொள்ளும்.*
*"பிள்ளையாரப்பா"*
*ஒரு வார்த்தை உதிரும் அவ்வளவுதான்.*
*குருக்கள் வருவார்.*
*தெய்வத்துக்கு ஏதேனும்*
*தின்னக் கொடுத்துவிட்டு செல்வார்.*
*வாசலில் ஏறினால்*
*வௌவால் புழுக்கை வாசமே வரவேற்கும்.*
*மணி அடிக்க ஆளிராது.*
*பலிபீடப் புக்கைக்காக இரண்டு காகங்கள்*
*நந்தியில் குந்தி இருக்கும்.*
*பூசை முடியும்*



Tamileelam Archive

வாசற் கதவில் பூட்டு விழும்.
அடுத்த கோவிலுக்கு ஐயர் பறப்பார்.
தெய்வம் சிரிக்கும்.
பூட்டிய கருவறைக்குள்
பிரபஞ்ச இயக்கத்தின் மையப்புள்ளி
போட்டபடி கிடக்கும்.
தினசரிகள் இப்படிக்கழிய
திருவிழாப் பட்சம் வரும்
ஊரெல்லாம் உயிர்ப்புக் கொள்ளும்.
கோயில் வளவின் பற்றைகள் கொழுத்தப்படும்.
காவிகலந்த சுண்ணாம்பு பூசி
வீதி மதிற்சுவர் பல்லைக்காட்டும்.
ஒரு வெள்ளிக்கிழமை
அகலக்கரை 'ஆந்திரா வேட்டி'யும்
தோள்கள் சுமக்கும் சால்வையுமாக
எடுபிடிகள் இருபுறமும் இருக்க
'தர்மகர்த்தா' வண்டியில் வருவார்.
வெளிமண்டபத்தில் 'மஹா சபைக்கூட்டம்'
உபயகாரருக்குப் பூச்சரம் கொடுப்பதுடன்
கூட்டம் இனிதே நிறைவுறும்.
பிறகென்ன
கோயில் கொடியேறும்.
கொடிமரம் இல்லாத கோவிலா
அதற்கென்ன?
அலங்காரத் திருவிழா அமர்க்களப்படும்.
சாத்துப்படி ஐயர்
எழுந்தருளிக்குப் புளிக்காப்புப் போட்டு
பொன்னாக்கி விடுவார்.
வடையும், மோதகமும் வாய்க்கு ருசியாகும்.
புளிச்சாதப்பட்டையின்
த்ழித வாசத்தில் உமிழ்நீர் ஊற்றெடுக்கும்
குருக்கள் அம்மாவின் கைராசி அப்படி.
ஊர்கூடித் தேரிழுக்கும்.
இரவு
மின்விளக்குகள் கண்ணடிக்கும்.

*மேளமும் நாதஸ்வரமும்*
*இணுவிலில் இருந்து இறக்குமதியாகும்.*
*"ஒட்டகத்தை கட்டிக்கோ..."*
*பாட்டுக்காரர் பாடத்தொடங்குவர்.*
*இளசுகள்*
*எதிர்ப்பாற்காரரை*
*ஓரவிழியால் உண்ணத் தொடங்குவர்.*
*"கற்பில் சிறந்தவள்*
*கண்ணகியா சீதையா"*
*பட்டிமன்றத்தில்*
*மருத்துவப் பரிசோதனை நடக்கும்*
*'காஞ்சிபுரங்கள்' வாய் முத்துச் சிதற*
*பத்தினிகளின் சேலையுரிவதைப் பார்த்திருப்பார்.*
*கண்கள் மொய்க்கும் நேரம்*
*வில்லுப்பாட்டுத் தொடங்கும்*
*முடிய விடியும்.*
*அர்ச்சனைச் சில்லறையுடனும்*
*அண்டா, குண்டா, இட்லிச்சட்டியுடனும்*
*'மடப்பள்ளி'யிலிருந்து*
*குருக்கள் குடும்பம் வெளியேறும்.*
*மீண்டும்*
*வயல்வெளி சூனியப் பிரதேசமாகும்*
*கலைந்துபோன வௌவால்கள்*
*கோயில் மண்டபத்தில் குடியேறும்.*
*C - 90 மண்ணெண்ணெய்ச் சைக்கிளில்*
*குருக்கள் வந்து குதிப்பார்*
*பத்து நிமிடத்தில் பூசைமுடியும்.*
*தெய்வம் சிரிக்கும்.*
*பூட்டிய அறைக்குள்*
*பிரபஞ்ச இயக்கத்தின் மையப்புள்ளி*
*போட்டபடி கிடக்கும்.*
*□□*

*வெளிச்சம்*
*ஆடி 1994*

# கண்ணிமைக்கும் நேரத்தில் மின்னல்

ஒரு சனிக்கிழமை காலை
கண்ணிமைக்கும் நேரத்துள்
வானத்தைக் கிழித்துக் கொண்டு
அது வந்தது.
யாரும் எதிர்பார்க்கவில்லை.
மின்னல்.



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

*தொடர்ந்து ஒரு வெடியோசை.*
*எல்லாம் நடந்து முடிந்தது.*
*ஐயோ! நேற்றிருந்த அழகென்ன?*
*வெளிர் நீல நிறத்தில் அந்த வீடு.*
*முற்றத்துப் புல்வெளி,*
*வரிசை கட்டிப் பூத்திருக்கும் ரோஜாச் செடிகள்,*
*வாசலுக்குப் போனால்*
*ஓடிவந்து வாலாட்டும் சடைத்த 'பொமேரியன்'.*
*கவிதையொன்று காற்றில் திரிவதுபோல*
*சிரித்தபடி முகம் காட்டும்*
*அந்த வீட்டு இளம்பெண்,*
*அவள் கணவன்,*
*முற்றத்து ஊஞ்சலில்*
*அல்லது தாயின் தோள்களில்*
*அடிக்கடி காணும் அவர்களின் பிஞ்சுப்பூ*
*எதுவுமே தப்பவில்லை*
*எல்லாமும் இல்லாமற் போய்விட்டது.*
*வந்த 'அசுரப்பறவை' கூடடைந்திருக்கும்.*
*ஒப்பாரி ஓலம் கொழும்புக்குக் கேட்டிருக்காது.*
*பார்த்த பக்கத்து வீட்டுச் சிறுவனை*
*அன்றிலிருந்து காணவில்லை*
*பயிற்சிக்குப் போய்விட்டானாம்.*
□□

*வெளிச்சம்*
*ஆவணி 1994*

# கூத்தாடிகள்

மதிற் சுவர்களுக்கு கைகளில்லாததால்
சுவரொட்டி ஒட்டுபவர்கள்
உயிருடன் திரும்புகின்றனர்.
வாக்குச் சீட்டுக்கு வாயில்லாததால்
வேட்பாளர்கள் தப்பிக்கொள்கின்றனர்.
சாக்கடைச்சேறு அள்ளுபவர்களுக்கும்
நேர்முகத் தேர்வு உண்டு
தகுதிபார்த்தே நகரசபை வேலைவழங்கும்.
அரசியல்வாதியாக மட்டும்
எதுவும் வேண்டாம்.
அம்மணமானாலும் அதற்கென்ன?
எவன் கேட்பானோ அவன் வேட்பாளன்.
அரசியலுக்கு வந்துவிட்டால்
ஆணுக்கும் பெண்ணுக்கும்
அங்கங்கள் வேறுபடுமே தவிர

*ஆசைகள் வேறுபடுவதில்லை.*
*மார்புக்கச்சையும் கோவணக் கச்சையும்*
*மாறிமாறி அணிந்து கொள்ளலாம்.*
*அறுபதிலே ஆசை அறும்*
*சுத்தப் பொய்.*
*அரசியல் வாதிகளுக்கு*
*அறுபதுக்குப் பின்புதான் எல்லாமே ஆரம்பம்.*
*வெற்றிபெற வேண்டுமென்பதற்காக*
*கட்டிய மனைவியையே காசுக்கு விற்பார்கள்.*
*பொதுத்தேர்தல் வந்துவிட்டால்*
*பிள்ளைக்கறியுடன் பந்தி பரிமாறுவர்.*
*தேர்தல் ஒரு கூத்து*
*மக்களோ சூத்திரக்கிணற்றடி மாடுகள்.*
□□

*வெளிச்சம்*
*ஆவணி 1994*